முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

—வார இதழ்—

முரசு: 4 | 21-3-58 | வெள்ளி | ஒலி 45

வெளிச்சம்போட்டு வாழாதீர்; தொழிலாளருக்கு உதவி செய்வீர்!

[10—3—58 அன்று மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஆதரித்து நடைபெற்ற சர்வகட்சிப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.]

அறிஞர் அண்ணா

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால், அது வேடிக்கைக்கோ, பொழுது போக்குக்காகவோ, அல்லது மகிழ்ச்சி தரத் தக்க தொன்றென்று கருதி அவர்கள் அதில் ஈடுபடவில்லை. அந்த வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க, எத்தனை முறைகள் உண்டோ அந்த முறைகளையெல்லாம் முயன்று, தொழிலாளர்களுக்கு அன்புரை வழங்க ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். அப்படியல்லாமல், இவர்கள் என்ன செய்ய முடியும், என்று அலட்சியப்படுத்தி விடுவதோ, நம்மை இவர்கள் எதிர்க்கிறார்களே என்று ஆத்திரப்படுவதோ ஆட்சியாளருக்கு அழகல்ல; "இவர்களை எந்தெந்த எதிர்க்கட்சிக்காரர்கள் ஆதரிக்கிறார்கள்; அவர்களையெல்லாம் பிடித்து முதலில் உள்ளே வைத்து விடுவோம்" என்று கருதுவதும் முறையல்ல.

வேலை நிறுத்தம் என்றால் அதனால் விளையும் விளைவை அறிந்துதான் — பொறுப்பை உணர்ந்துதான்—அதிலே நல்ல அடிப்படை இருக்கிறது என்பதைக் கருதித்தான் ஈடுபடுகிறார்கள் தொழிலாளர்கள். வேலை நிறுத்தம் என்பது ஏதோ மனித உரிமைக்கு அப்பாற்பட்டதல்ல.

மின்சாரத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் மிகமிகக் குறைந்தவைதான். அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதால், சர்க்காருக்கு ஒன்றும் நஷ்டமில்லை. பசி போக்க ஒரு பிடி சோறுபோல இருள் போக்க ஒளி தருகிறது மின்சாரம். உலகுக்கு ஒளியும் தொழிலுக்கு உயிரோட்டமும் கொடுத்துவிட்டுத்தான் வயிற்றுக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள் அவர்கள்.

•

தொழிலாளரைப் பாதுகாக்க, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்; மக்கள் அல்லாமல் சர்க்காரில்லை. மக்கள் தோன்றிதான் சர்க்கார் ஏற்பட்டதே தவிர சர்க்கார் ஏற்பட்டு அதன்பின் மக்கள் தோன்றவில்லை. நியாயத்தை உணர்ந்தவர்கள் இன்றைய சர்க்காரில் யாருமில்லை. ஒரு நல்ல சர்க்காரானால் வேலை நிறுத்தம் என்றால் அதைக் கண்டு கோபம் வரக்கூடாது; வருத்தப்பட வேண்டும்; எண்ணி எண்ணி மனம் வாட வேண்டும்; கோபப்பட்டுப் பயன் இல்லை.

மின்சாரத் தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள்; அவர்கள் கோரிக்கைகளை ஆட்சியாளர்கள் அலட்சியப் படுத்திவிட முடியாது.

நாளையதினம் நடக்க இருந்த வேலை நிறுத்தத்தை சில நாட்களுக்கு ஒத்தி வைக்குமாறு நாங்கள் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அதன்படி அவர்கள் ஒத்திவைக்கிறார்கள். ஒத்திவைத்ததானது, அவர்களுடைய பெருந்தன்மைக்கும, தரத்திற்கும், திறத்திற்கும் அறிகுறியாகும். அவர்களுக்குள்ள பெருந்தன்மையில் ஆயிரத்தில் ஒரு பங்கு பெருந்தன்மையாவது ஆட்சியாளருக்கு இருக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இயன்றவரை வேலை நிறுத்தம் நடைபெறாமலேயே, கண்ணீர் சிந்தாமலேயே காரியம் கைகூடும் என்று கருதுகிறேன்; அந்த அளவுக்கு ஆட்சியாளருடைய சிந்தனை செம்மைப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். மின்சாரத் தொழிலாளர்களின் வெற்றிக்கு எல்லா வகையிலும் எங்கள் உறுதுணை கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் பிரச்சினையை ஆட்சியாளர்கள் கவனிக்கவில்லையா என்றால் கவனிக்கிறார்கள்; எப்படி?

மரம் வளரவேண்டுமானால் அடியிலுள்ள வேரில் தண்ணீர் ஊற்றவேண்டும்; ஆனால், ஆட்சியாளர்களோ, மரத்தின் மேலுள்ள இலையின்மேல் பன்னீரை வார்த்து, எங்களை அழைத்து 'இதோ பாருங்கள் மரத்துக்குப் பன்னீர் ஊற்றியிருக்கிறோம்' என்று கூறிப் பெருமைப்படுகிறார்கள். பன்னீர் மணமிக்கதுதான்; மரத்தின் இலையிலே அதன் மணம் கமழ்வது எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் வேரிலே தண்ணீர் ஊற்றினாலல்லவா மரம் பிழைக்கும்; தழைக்கும்!

வரவு-செலவுக் கணக்கை பக்கம் பக்கமாக அச்சிட்டு எங்களிடத்திலே அதைப் படித்துக் காட்டி, மாணவர்களுக்கு ஆசிரியர் எடுத்துச் சொல்லுவது போல, பாடம் சொல்கிறார் நிதியமைச்சர். வரவு இவ்வளவு—செலவு இவ்வளவு என்று காட்டுகிறார்கள். அப்படிக் காட்டி என்ன பயன்? செலவு செய்வது பயனுள்ள காரியங்களுக்குப் பயன்பட வேண்டுமே! விழலுக்குத் தண்ணீர் இறைத்து என்ன பயன்?

நிதியமைச்சர் இவ்வாண்டு, வரவு-செலவுத் திட்டத்தில் வழக்கத்திற்கு மாறாக, துண்டு விழும் பட்ஜெட்டாக இல்லாமல்—15 இலட்ச ரூபாய் அதிகப்படியாகக் கிடைக்கும் என்ற நிலையில் கணக்குக் காண்பித்தார். அதைக் குறித்து அவரே பெருமிதமடைந்தார். 'ராபர்ட் புரூஸ்' போல பல தடவை முயற்சிசெய்து இந்த ஆண்டுதான் உபரி பட்ஜெட் தயாரிக்க முடிந்தது என்றார். இன்னும் 4—5 ஆண்டுகளுக்கு நிதி நிலை சரியாக இருக்கும் என்றும் நம்பிக்கையூட்டினார். அவர் அப்படிச் சொன்னதும், அதை நான்தான் முதல் முதலாக வரவேற்று, பாராட்டும் வகையில் கையை மேஜையின் மீது தட்டிக் காட்டினேன்.

எனவே நான் அமைச்சருக்குச் சொல்லிக் கொள்கிறேன், நிதிநிலை சரியாக உள்ள இந்த நல்ல வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு தொழிலாளர் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள். இதைச் செய்வதால் உங்களுக்கு ஒன்றும் நஷ்டமும் இல்லை. எனக்கு ஏதோ லாபம் வந்து விடுமென்றும் நீங்கள் கருத வேண்டாம், எப்படியோ தொழிலாளி நன்மையடைந்தால் போதும். வேருக்குத் தண்ணீர் ஊற்ற என் தயக்கம்?

நிதி நிலை போதுமான அளவு இருந்தும், தொழிலாளரின் குறையைத் தீர்க்க முடியவில்லையென்றால், அதற்குக் காரணம்—மின்சாரத் தொழிலாளர் பாஷையிலே சொல்ல வேண்டுமானால், எங்கோ 'லீக்கேஜ்' ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். மின்சாரம் இருந்தும், லைட் எரியவில்லையென்றால் மின்சாரக் கம்பி எங்காவது பழுதுபட்டு, 'லீக்கேஜ்' ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுவார்கள். அதன்பின் 'லீக்கேஜ்' எங்கிருக்கிறது என்று கண்டுபிடித்து ஓட்டையை அடைத்து அல்லது பழைய 'ஒயரை' அகற்றி புது 'ஒயர்' போடுவார்கள். அதைப் போல அரசாங்கத்திலும் ஓட்டை (லீக்கேஜ்) இருக்கிறது. அந்த ஓட்டையைக் கண்டுபிடித்து அடைத்தாக வேண்டும். அந்த ஓட்டையை அடைக்க எல்லா கட்சியிலும் உள்ளவர்களைக் கூட்டி அவர்கள் உதவி கொண்டு அடைத்தால் நிச்சயம் அடைபடும்.

அண்மையில் முன்னாள் அமைச்சர் சேதுபதி (இராமநாதபுரம் ராஜா!) அவர்கள் இந்த லீக்கேஜைப் பற்றி சில உண்மைகளை வெளியிட்டார்கள். காண்டிராக்டர்களும்

[தொடர்ச்சி பக்கம்—12]

கற்பனை உரையாடல்

வான்மதியும் வள்ளுவரும்

[தென்னிலவு தனிற் சிலிர்த்திடும் இரவு நேரத்திலே வெண்ணிலாவை நோக்கிய தென்னகத்தின் தனிப் பெருங் கவிஞர் திருவள்ளுவர் அந்த வான்மதியோடு கீழ்க்கண்டவாறு உரையாடிக் கொண்டிருந்தார்!

அதே நேரத்திலே பாரதியார் வெண்ணிலாவை நோக்கி,

"மாதர் முகத்தை நினைக்கின கூறுவச்

வெண்ணிலாவே!—அஃது
வயதிற் கவலையின் கோவிற்
கெடுவது வெண்ணிலாவே!..."

என்று பாடிக்கொண்டிருந்தார். மாதர் முகத்தை வெறுத்து வெண்ணிலாவை நோக்கிப் பாடும் பாரதியாருக்கு வள்ளுவரே பதிலளிக்கிறார்! இன்றைய நிலையில் வான்மதிக்குள்ள அழகையும் மதிப்பையும் தன் காதலியின் அழகோடு எடையிட்டு வள்ளுவர் பேசுகிறார்; கேளுங்கள்!...]

அன்புள்ள வான்மதியே!

நீ பிறை மதியாய் தோன்றிய போது உன்னை முதன் முதலில் கண்டேன். பிறை மதியாய் தோன்றிய நீ வளர் மதியாய் வளர்ந்தாய்; வளரும் ஒவ்வொரு பருவத்திலும் அழகு பெற்றுப் பொலிவுடன் தான் விளங்குகிருய்!

நீ கண்களைச் சிமிட்டி என்னைப் பார்க்கும்போது என்னை நீ காதலிப்பதுபோல் தோன்றுகிறது! ஆனால்...வான் மதி!... எனக்கு முன்பே ஒரு காதலி இருக்கிருள்! அவளை நீகூடக் கண்டிருக்கலாம்! உன் தோழிகளாகிய விண்மீன்கள்கூடக் கண்டார்களாம்! அதைப் பற்றி ஒரு வேடிக்கையான கதையை என் காதலி எனக்குக் கூறினுள்...அந்தக் கதையைக் கூறட்டுமா?...

[இதைக் கேட்ட மதி, 'கூறுங்கலேன்!" எனக் கூறிவிட்டு நாணத்தால் மேகக் கூட்டத்திடையே மறைந்துகொண்டே தலையைமட்டும் வெளியே நீட்டிக்கொண்டு வள்ளுவர் கூறுவதைக் கேட்கிருள்!...]

ஒருநாள் இரவு வானத்திலே பலப் பல தோழியர்களாகிய விண்மீன்களுடன் திரிந்து கொண்டிருந்தாயாம்! அப்பொழுது என் அருமைக் காதலியும் அவளது தோழிகளுடன் சுற்றி வந்தாளாம்!

என் காதலியைக் கண்ட உன் தோழியர்களாகிய விண்மீன்கள், "இது ஏது மண்ணுலகிலே ஒரு புதிய மதி?...ஐயா! நமமுடைய தலைவி இவளா?... அல்லது மண்ணுலகிலே அதோ...காணப்படும் அந்த மதியா?...அட, நீதான் சொல்லடி! தோழி!...எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறதே!... இந்த இரண்டு மதிகளிலே நம் தலைவி வான்மதி யாரடி...?" என்று கூறிச் செயவதறியாது புலம்பினர்களாம்!

வான்மதி! உன்னைவிட அழகாகத்தான் எனக்கு என் காதலி காட்சியளிக்கிருள்! எனக்கு மட்டும்தான் அப்படிக் காட்சியளிக்கிருளோ—என நான் ஐயுற்றேன்! ஆனால், உன் தோழிகள் திண்டாடிய அந்தக் கதையைக் கேட்ட பிறகு என் ஐயமெல்லாம் நீங்கிவிட்டது!

[மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்!
—குறள்: 1116]

அது சரி!...இந்த நிகழ்ச்சிபற்றி உன்னிடம் உன் தோழிகள் கூறவே இல்லையா?...கூறியிருக்க மாட்டார்கள்!...உன்னையே அடையாளம் தெரியாமல் விழித்ததாக உன்னிடம் கூறுவார்களா என்ன?...

இங்ஙனம் அவர்கள் ஐயுற்றதற்குக் காரணந்தான் என்னவென்பதை நீ சிந்தித்துப் பார்!

"என்ன? எனக்கும் உன் காதலிக்கும் அடையாளம் தெரியவில்லையா? அதுவும் என் அருகில் கண் சிமிட்டித் திரியும் என் தோழிகளுக்கா? பேடிகள்! பேதைகள்!" என நீ திட்டுவது என் காதுகளில் விழுகிறது!

நானும் அதையேதான் கேட்க விரும்புகிறேன். வான்மதியே! நீயோ உன் தோழிகளுக்குப் பக்கத்திலேயே இருக்கிருய். மேலும் நீ தேய்ந்துகொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கிருய். ஆனால் என் காதலி உன்னைப்போன்றவள் அல்லள்! அவள் முழு மதி! அவள் எப்பொழுதும் முழு மதிதான்! தேயாத முழு மதி! அப்படியிருக்க என் காதலியைப் பிரித்துணர முடியாத பேதையாளாம் உன் தோழிகளை நான் என்னென்று சொல்வேன்?

அதுதான் போகட்டும்! முகத்தைப் பார்த்துக் கூடவா அடையாளம் கண்டு பிடிக்கக் கூடாது? உன் முகத்திலே காணப்படும் களங்கம் என் காதலியின் முகத்திலே உண்டோ? அதையாவது உன் காதலிகள் சிந்தித்துத் தெளிந்தார்களா? அதுவும் இல்லை!

[அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போவ
மறுவுண்டோ மாதர் முகத்து
—குறள் 1117]

அன்புள்ள வான்மதியே! நான் ஏதோ உன்னை இழிவுபடுத்துவதாகக் கருதவேண்டாம். காதல் பித்தினுல் கூறுவதாகவும் கருத வேண்டாம்! உண்மையில் என் உள்ளத்தில் பட்டதை மறைக்காமல் கூறுகிறேன் நான்! உன் முகம் என் காதலியின் முகத்தைப் போல் ஒளி வீச முடியாதே! ஏனென்று கேட்கலாம்! அதற்கு உன் முகத்திலே உள்ள மருவே உனக்குப் பதில் கூறும்! நீ என் காதலியைப் பார்த்திருக்கிருயா? அவளது களங்கமற்ற அழகு முகத்தைத்தான் கண்டிருக்கிருயா? அப்படிக் காணாத உன் தன் கண்கள்தான் என்ன கண்களோ?

மருவற்ற என் காதலியின் முகத்தைப்போல நீ ஒளி வீசினுல் நீ ஒருக்கால் என் அன்பைப் பெறலாம். "என் முகத்தில் உள்ள மரு நீங்கவும் போவதில்லை! நானும் உன் அன்பைப் பெறப்போவதுமில்லை!" என்கிருய ? அப்படியானுல் அதற்குத்தான் நான் என்ன செய்ப இயலும்?

[மாதர் முகம்போல ஒளிவிட
வல்லையேற்
காதலை வாழி மதி"
—குறள் 1118]

"ஆமாம்! உன் காதலிமட்டும் எப்பொழுதும் ஒளி வீசும் முழு மதியாக இருப்பதின் இரகசியந்தான் என்ன? அந்த இரகசியத்தை எனக்குக் கூறமாட்டாயா? நானும் உன் காதலியைப் போன்று வாழ வேண்டாமா?" எனக் கேட்கிருயா? வான்மதியே! நீ நீடூழி வாழ்வாயாக! நீ வாழத்தானே வேண்டும்! நீ இல்லாவிட்டால் என்றுமே அமாவாசை இருளின் அல்லலை அநுபவிக்க வேண்டுமே!

மலர்போன்ற கண்களை உடைய என் காதலியின் முகத்தைப் போன்ற அழகிய முகத்தைப் பெற நீ விரும்புகிருயா? "ஆமாம்! ஆமாம்! அதே ஏக்கந்தான் எனக்கு!" என்று கூறி நீ விடும் பெருமூச்சு தென்றலையும் வாடைக் காற்ருக மாற்றிவிட்டதே! அப்படியானுல் நீ ஒன்று செய்! செய்ய முடியுமானுல் செய்! அட, செய்துதான் பாரேன்!

நீ பலர் காணும்படியாகத் தோன்ருதே!

நான் காணும்படி மட்டும் தோன்றுவாயாக!

"ஐயையோ! அதெப்படி முடியும்?" எனக் கேட்கிருயா? நீ உலகிலுள்ள மக்களனைவருக்கும் காட்சியளிக்கிருயே! அதுதான் கற்புடைமையா? என் காதலியைப் பார்! அவள் என் கண்களுக்கு மட்டும் தான் காட்சியளிப்பாள்! அதனுல்தான் அவள் முகம் உன்னுடைய முகத்தைவிடப் பன்மடங்கு பிரகாசமாக ஒளி வீசுகிறது! ஆனல் உலகத்து மக்களனைவருக்கும் காட்சியளிக்கும் உன் முகத்தின் ஒளி குன்றிவிட்டது! மங்கிவிட்டது!

[மலரன்ன கண்ணுள் முகமொத்தியாயிற்
பலர்காணத் தோன்றல் மதி
—குறள் 1119]

ஆனல் என் காதலியின் முகமோ என்றும் மங்காத பேரொளி வீசக் கூடியது; அவளது அடிகள் அனிச்சப் பூவைவிட மென்மையானது; அவளது தோள்கள் அமிழ்தத்தால் செய்யப்பட்டவையாகும்; பூவையணிந்த கூந்தலையுடையவள்; அவளது கண்கள் கயல் மீன்களைப் போன்றவை! இவளை முதன் முதலில் கண்டபோது, "அணங்கு கொல்? ஆய்மயில் கொல்? கனங்குழை மாதர் கொல்?" எனப் பலவாறு நினைத்து மயங்கி, என் உள்ளத்தைப் பறி கொடுத்தேன்! அத்தகையவள் காதலைப் புறக்கணித்துவிட்டு உன்னை நான் ஏற்கமுடியுமா? உன்னை நான் காதலிக்க இயலாமைக்கு வருந்துகிறேன்.

"என்ன இருந்தாலும் இனிமேல் 'மதி'யென்ருல் 'இயற்கை மதியா? செயற்கை மதியா?' என்று கேட்பார்களே! என்னையே மதியெனத் துதித்த இந்த மக்களுக்கு வேருெரு மதியேன்?" என்று கூறி நீ பெருமூச்சு விடுகிருய். நீ சொல்வதும் உண்மைதான்!

ஆனல் வான்மதி!...உன்னைக் கண்டு—உன்னுடைய இன்றைய நிலையைக் கண்டு நான் அனுதாபப்படுகிறேன்! உன்னைவிட அழகான ஒளி தரக்கூடிய செயற்கை வான்மதி வானிலே தோன்றி விட்டால் இந்த நன்றி கெட்ட மனித இனம், நீ செய்த நன்மைகளையெல்லாம் மறந்துவிட்டுப் புதிய வான்மதியைத்தான் போற்றும்! நானும் அத்தகைய நன்றி கெட்ட கும்ப

[தொடர்ச்சி பக்கம்—8]

நீங்கள் எதிர்பார்த்த மலிவுப் பதிப்பு வெளிவந்து விட்டது!

கலித்தொகை

மூலமும் விளக்கமும்

விளக்கம்: சக்திதாசன் சுப்பிரமணியன்

உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிச் சித்திரங்கள் படிக்கப் படிக்கப் பரவசமாக்கும்! ஒவ்வொரு காட்சியும் கதைபோல் சொல்லப்பட்டிருக்கிறது! முற்றிலும் புதிய முறை!

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணைப் பாடல்களும் சீர் பிரித்துத் தெளிவாக அச்சிடப்பட்டுள்ளன!

இலங்கனின் கண்ணுடி!

பாட்டு முதற் குறிப்பு அகராதி!

ஒவ்வொன்றுக்கும் தனித் தனி விளக்கம்!

இளைஞர் முதல் பெரியோர்வரை யாவரும் படித்து இன்புறத்தக்க தெளிவான நடை!

450 பக்கங்கள்—அழகான பதிப்பு! மூவர்ண அட்டை!

புதுச்சேரி அன்பு வெளியீடு

விலை ரூ. 2.

விபரங்களுக்கு:

தமிழகம், 59, பிராட்வே, சென்னை-1

வெள்ளி 21-3-58 சென்னை

ஓரவஞ்சகம்!

விலைவாசிகள் உயர்ந்திருக்கிற இந்த நேரத்திலே தமிழகத்தில் முக்கியமாக இரு சாரார் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர், அரசாங்கத்தின் அசமந்தப் போக்கு காரணமாக!

மாநில சர்க்கார் ஊழியர்கள்

ஆசிரியர்கள்

—இந்த இரு சாராரின் துன்பமும் தொல்லையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கிறதே தவிர அணுவளவேனும் குறைந்ததாகத் தெரியவில்லை!

—இவர்களுள் ஆசிரியர்கள் நிலையோ பரம்பரை பரம்பரையாக அப்படியே இருக்கிறது என்பதைச் சொல்லிக் காட்டாமலிருக்க **முடியவில்லை.**

பழங் காலத்திலே புலவர்கள் வறுமைக்கு வாழ்க்கைப்பட்டு அவதிப்பட்டு அலைந்ததைப் பார்க்கிறோம்.

இன்றோ அந்த வியாதி ஆசிரிய நண்பர்களைப் பற்றிக்கொண்டதோ—என்றுதான் நாம் கருதவேண்டியிருக்கிறது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்"

—இது பழமொழி!

"எழுத்தறிவித்தவன் வறியனாகும்"

—இப்படித்தான் இன்றைய நிலைமைக்கேற்ப பழமொழியை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது!

"ஆசிரியர் வேலைக்கும் போதுமான நபர்கள் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்குப் போதிய ஊதியம் கொடுக்கப்படாததுதான்!'

—என்று அண்மையில் அமைச்சர் சுப்பிரமணியனார் அவர்களே சட்ட மன்றத்திலே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

—இருந்தும் அவர்களுக்குப் போதுமான ஊதியம் கிடைப்பதற்கு என் ஏற்பாடு செய்யவில்லை?

—அமைச்சர் இதுபோன்ற கேள்விகளுக்கு எப்போதுமே சரியான பதில் சொல்வது கிடையாது.

இன்றைய குழந்தைகள் நாளைய பிரஜைகள்! 'இன்றைய குழந்தைகளைக் கொடுங்கள்; நாளை நல்லதொரு நாட்டைத் தருகிறேன்' என்றான் லெனின்.

அத்தகைய குழந்தைகளைத் தயாரிக்கும் பொறுப்பான பணியிலே ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களோ பூனை தூங்குகின்ற அடுப்பிற்கும்; பட்டினி கிடக்கின்ற வயிற்றிற்கும்; கடனுக்கும்; நோய்க்கும் இரையாகித் தவித்திட வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

இப்படிக் குறைந்த ஊதியம் பெறுகிற ஆசிரியர்கள் விலைவாசிகள் உயர்ந்திருக்கும் இந்த வேளையில் வீட்டு வாடகைக்கென தங்கள் சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதியைச் செலவழித்துவிடுகின்றனர்.

அதனால்தான் சம்பளத்தோடு வாடகைப் படியையும் கொடுத்து எங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துங்கள்—என்று ஆசிரிய நண்பர்கள் போராடி வந்தார்கள்!

இறுதியில் காருண்ய அரசாங்கம் கடைக்கண் பார்வையைத் திறந்தது. ஆனால் அந்தப் பார்வையும் ஓரவஞ்சகமாய் அமைந்திருப்பதுதான் மனச் சங்கடத்திற்குரிய விஷயமாக அமைந்திருக்கிறது.

சுமார் 55 ஆயிரம் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் வாடகைப் படிக்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

மீதமிருக்கும் 45 ஆயிரம் ஆசிரியர்களுக்கோ அது இல்லை—என்று கைவிரித்திருக்கிறது!

—அதாவது நகர மன்றமும், மாவட்ட மன்றமும் நடத்துகின்ற பள்ளிகளின் ஆசிரியர்களுக்குத்தான் இந்த வாடகைப் படி உண்டாம்!

ஆனால் அரசாங்க உதவியுடன் தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகின்ற 45 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இந்தச் சிறு உதவி கிடையாதாம்!

அமைச்சர்கள் பெறுகின்ற ஊதியத்தைப்போலவோ; அல்லது பிரயாணப் படியைப்போலவோ ஆசிரியர்களுக்குத் தருகின்ற வாடகைப்படி அப்படி யொன்றும் பெரிய தொகை அல்ல. சாதாரண மூன்று ரூபாய்தான்! நகரங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு மட்டும் ரூபாய் ஐந்து முதல் ஒன்பதுவரை!

—அதன்படியே அரசாங்க உதவியுடன் தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற பள்ளிகளில் பணியாற்றும் 45 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் வாடகைப்படி கொடுக்க ஏற்பாடு செய்தால், அப்படி ஒன்றும் இந்த அரசாங்கத்தின் கஜானா காலியாகிவிடாது!

அதனால் அதிகமாக ஏற்படுகிற செலவு சுமார் ஆறு லட்சம் ரூபாய்தான் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள்!

—இந்த ஆறே ஆறு லட்சம் ரூபாய்களுக்குத்தான் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யாமல் அவர்களை அவதிக்குள்ளாக்கியிருக்கிறது!

நகர மன்றங்களின் ஆதரவிலும், மாவட்ட மன்றங்களின் ஆதரவிலும் இயங்கும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அரசாங்க உதவியுடன் தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் எந்தவித வேறுபாடும் கிடையாது! அவர்கள் சமமாகத்தான் இதுவரை ஊழியம் செய்து வருகின்றனர்!

—இருந்தும் ஒருவர் பெறுகின்ற வாடகைப் படி இன்னொருவருக்குக் கிடையாது.

அதுபோலவே மத்திய அரசாங்கத்தின் ஊழியர்களுக்கும் மாநில அரசாங்கத்தின் ஊழியர்களுக்கும் இடையே அவர்கள் புரிகின்ற பணிகளிலே பேதமில்லை.

—இருந்தும் அவர்கள் பெறுகின்ற ஊதியத்திலே பேதம் இருக்கிறது!

ஆட்சிக்கு வந்தவர்கள் வடக்கு—தெற்கு என்று பிரித்தாளுவதைப்போலவே உண்மை ஊழியம் புரிவோரிடையேயும் இரு பிரிவுக்கு வழிவகுத்து அவர்கள் ஒரு வகுப்பினர் என்ற ஒற்றுமைக்குக் கொள்ளி வைத்திருக்கின்றனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் 20—3—58 அன்று சென்னைக் கடற்கரையில் நடந்த சர்வகட்சிப் பொதுக்கூட்டத்தின்போது குறிப்பிட்டார்கள்:

"ஆறு குழந்தைகளுடைய ஒரு தாய், 4 குழந்தைக்கு மட்டும் முத்தம் கொடுத்து விட்டு, மற்ற குழந்தைகள் வந்தால் 'எனக்கு அதரம் நோவுகிறது; நான் முத்தம் தர மாட்டேன்' என்று சொல்ல மாட்டாள்; ஆனால் இந்தத் தாய் (நமது சர்க்கார்) தெருவிலே உள்ள பிள்ளைகளுக்கெல்லாம்—அதரம் கெட்ட, புண் படைத்த பிள்ளைகளுக் கெல்லாம் முத்தம் கொடுத்து விட்டு, தன் வீட்டிலேயுள்ள சொந்தக் குழந்தை 'அம்மா' என்று அழைத்து ஓடிவரும்போது, 'சீ, போ! எனக்கு அதரம் நோவுகிறது; முத்தம் தர மாட்டேன்' என்றுகூறி தாய்ப் பாசத்திலிருந்து தவறுவதைப் பார்க்கிறோம்.

"நாங்கள், என். ஜி. ஓ—க்களுக்கு ஊதிய உயர்வு தரவில்லையே என்று சட்டசபையில் கேட்டால், நிதியமைச்சர் கேட்கிறார்—'எதிலேயிருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கச் சொல்லுகிறீர்கள்?'—என்று!

"பல துறைகளுக்கும் பணம் ஒதுக்கும் போதே — எந்தெந்த துறைக்கு எவ்வளவு தொகை ஒதுக்குவது என்று யோசிக்கின்ற போதே நீங்கள் எதிர்க் கட்சிகளில் உள்ளவர்களை அழைத்து, 'இன்னின்ன துறைக்கு இவ்வளவு, ஒதுக்குகிறோம் சரிதானா?' என்று கேளுங்கள். அப்போழுது, 'இவ்வளவு இவ்வளவு ஒதுக்கி விட்டு, மிச்சத்தை என். ஜி. ஓ—க்களுக்கு ஒதுக்குங்கள்' என்று சொல்லுவோம். மிச்சத்தை எங்களால் காட்ட முடியும். அப்படியின்றி, நீங்களே எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு, எங்களைக் கேட்கின்றீர்கள்—'எதிலிருந்து ஒதுக்குவது?'—என்று!"

—இந்த நிலை வாடகைப்படி பெறாத 45 ஆயிரம் ஆசிரியத் தோழர்களுக்கும் பொருந்தி வருவதைப் பார்க்கிறோம்.

—எப்படியும் மத்திய அரசாங்கத்தோடு போராடி மாநில அரசாங்கம் இந்த இரு சாராரின் இன்னலைப் போக்காவிட்டால் குமுறி எழும் எரிமலை போன்ற அவர்கள் எதிர்ப்பை ஒருநாள் அவர்கள் சமாளிக்க முடியாமற்போகும் — என்றுதான் நாம் எச்சரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஃ

முதல் சம்பளம்!

முதல் மாத சம்பளத்தைப் பெற்றுக் கொண்டவுடன் ஊர்வசி வேகமாக காரியாலயத்தை விட்டு இறங்கி நடந்தாள். சம்பளம் வாங்குவதற்காக அவள் இரண்டரை மணிக்கு நாற்காலியை விட்டு எழுந்து சென்ற போது அவள் கால்கள் பூமியில் பாவாமல் அவ்வளவு வேகமாகச் சென்றாள். ஏனெனில், பணம் அவ்வளவு தேவையாக இருந்தது. 'காஷியர்' நூறு ரூபாய்களுக்கு 'நோட்டு'கள் கொடுத்ததையும் எண்ணிப் பார்க்காமல் பரபரப்புடன் வாங்கினாள். மாலை ஐந்தரை மணிக்கு காரியாலயம் முடியவுடன் அவள் வேகமாக வீட்டிற்கு நடை போட்டாள். அப்பொழுதுதான் அவளுடைய தோழி — காரியாலயத்தில் வேலை செய்யும் 'திலோத்தமா பிரதான்' ஊர்வசியைப் பார்த்து சிரித்துக் கொண்டே சொன்னாள்:

"என்ன ஊர்வசி பெருமாட்டியே! இன்றைக்கு தங்களுக்கு என்னென்ன 'புரோகிராம்' இருக்கிறது? ஓ, அதைப்பற்றியெல்லாம் ஏன் தாங்கள் கவலைப்பட வேண்டும்? முதல் மாதச் சம்பளம் கையில் குலுங்கிக் கொண்டிருக்கும்போது 'புரோகிராம்'முக்கு என்னதான் குறைச்சல் என்கிறீர்களா? ஆமாம் — கடகத்யானி என்கிற அறிஞர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? "முதல் மனைவியும் முதல் முத்தமும் தரும் இன்பத்திற்கு ஈடு இல்லை. அதைப்போல..."— அவள் பெரிதாகச் சிரித்தாள். அதைக் கண்டு ஊர்வசி,

"எனக்கு ஒரு 'புரோகிராம்'மும் இன்றைக்குக் கிடையாது. வீட்டில் என் தாய் நோயில் படுத்திருக்கிறாள். அதற்காக சீக்கிரம் போகணும். வழியில் அவளுக்காக மருந்தும் வாங்கிச் செல்ல வேண்டும்," என்றாள்.

இதைக் கேட்ட திலோத்தமா அவளை விட்டுவிட்டு முன்னேறி நடந்தாள். எதிரே சிரித்துக் கொண்டே வந்த ஒரு கல்லூரி மாணவனுடன் அவளும் கை கோர்த்துக் கொண்டு சென்று விட்டாள். ஊர்வசி இதைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். திலோத்தமா காரியாலயத்தில் வேலை செய்யும்போதும், வெளியே போகும்போதும், காரியாலய சிப்பந்திகளுடன் மிகவும் உறவாடிப் பழகுவாள். ஆனால் இன்று முன்பின் தெரியாத அன்னியன் ஒருவனுடன் கை கோர்த்துச் சென்றது அவளுக்குப் பிடிக்கவில்லை.

நடைபாதை அருகில் ஒரு கடிகாரக் கடை இருந்தது. ஊர்வசி தன் கைக் கடிகாரத்தைக் கழற்றி, கடைக்காரனிடம் கொடுத்தாள். அவளுடைய கடிகாரத்திலுள்ள முகப்புக் கண்ணாடி உடைந்திருந்தது. அதை அகற்றி, 'பள பள' வென்று பிரகாசிக்கும் வேறு கண்ணாடி போட்டுக் கொடுத்தான் கடைக்காரன். அதை வாங்கிக் கட்டிக் கொண்டு, பணம் கொடுத்துவிட்டு வந்தாள்.

அதைக் கட்டிக் கொள்ளும் போது அவளுக்கு தன் காரியாலயத்தின் நினைவு வந்தது. எப்படி உடைந்த கண்ணாடியால் மணியைப் பார்த்தால் அது அருவருப்பாக இருக்குமா, அப்படி அருவருப்பைத் தரும் மனிதர்கள் அவள் காரியாலயத்தில் இருந்தார்கள்.

●●●

அவளுக்கு அந்தக் காரியாலயத்தில 'டைப்பிஸ்டு' வேலை. அது கிடைப்பதற்கு அவள் பட்ட கஷ்டங்கள், பிரயத்தனங்கள் சொல்லி முடியாது. திடீரென்று அவள் தகப்பனர் இறந்துவிட்டதால் அவளுடைய கல்லூரிப் படிப்பும் நிறுத்த வேண்டியதாகி விட்டது. பிறகு அவள் 'டைப்' கற்றுக் கொண்டு வேலைக்குப் போய சம்பாதித்துக் கொண்டு வர வேண்டியயில்லை அவள் குடும்பத்திற்கு ஏற்பட்டு விட்டது.

'நியூ கார்டினென்டல் ஏஜென்ஸி'—இதுதான் அவள் வேலை செய்யும் காரியாலயத்தின் பெயர். அதனுள் வேலையெல்லாம் எப்படி நடக்கிறது என்று அவளுக்குத் தெரியாது. ஏதோ இங்கிலாந்திற்கும் —அமெரிக்காவுக்கும் வர்த்தகம் நடத்தும் ஸ்தாபனமாக இருக்கும் என்று அவள் நினைத்தாள்.

காரியாலயத்தில் வேலைக்குச் சென்ற முதல் நாளில் ஊர்வசிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எல்லாம் புதிதாக இருந்தன. ஆனால் அவளுடைய தோழி திலோத்தமாவினால் அவள் வேலைகளைக் கற்றுக் கொண்டாள். திலோத்தமா, ஊர்வசியின் பள்ளிச் சிநேகிதி இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். ஆனால் அப்பொழுதெல்லாம் திலோத்தமா, வீட்டில் நன்றாகத் துவைத்த வெள்ளை ஆடைகளையே உடுத்தி பள்ளிக்கு வருவாள். ஆனால் இன்று காரியாலயத்தில திலோத்தமாவைப் பார்த்துத் திகைத்தாள். அவள் பெரிய பெரிய பூக்கள் கொண்ட அழகிய 'டிசைன்களால்' அலங்கரிக்கப்பட்ட பலவித நிறம் கொண்ட 'சில்க' புடவை உடுத்திவந்தாள். அவை அவளுடைய உள்ளுடலை மிகைப்படுத்திக் காட்டின. கண்களைச் சுற்றி, திருடனைப்போல் பயமுறுத்தும் கருப்பு மை பூசியிருந்தாள். தன் கறுப்புடலை மறைக்க முகமெல்லாம் பவுடர் அப்பியிருந்தாள். உதட்டில் 'லிப் ஸ்டிக்' தடவியிருந்தாள். இவ்வளவு ஆடையலங்காரத்துடன் விளங்கும் திலோத்தமையைக் கண்டு ஊர்வசி பிரமித்து நின்றாள்.

சிறிது நேரத்தில் காரியாலயமே அலறும்படி 'கடகட' வென்று சிரித்துக்கொண்டே இன்னொருவள் நுழைந்தாள். அவள் உடுத்தியிருந்த உடையும், விதமும் பார்க்கப் பிடிக்காததால் மறுபடி ஊர்வசி வேறு பக்கம் திருப்பி உட்கார்ந்தாள். அந்தத் தோழி ஊர்வசியைத் தட்டிவிட்டு சிரித்துவிட்டுச் சென்றாள்.

காரியாலபத்தில் வேலை செய்யும் சிப்பந்திகள் என்னென்ன பேசிக்கொள்வார்கள் என்று அவளுக்குத் தெரியாது. ஆனால் இன்று வேலை செய்ய வந்ததால், யார் யார் எப்படிப் பேசுகிறார்கள் என்பதைக் கேட்க முடிந்தது.

அவளுக்கு என்ன வேலை; எப்படிச் செய்ய வேண்டும் என்பதை யாரும் சொல்லித் தரவில்லை. சமயத்தில் திலோத்தமா அவளிடம் வந்து, "ஊர்வசி! இப்படி வா! நம் காரியாலயத்தில் உள்ளவர்களுக்கு உன்னை அறிமுகம் செய்து வைக்கிறேன்," என்று அழைத்தாள். ஊர்வசி பேசாமல் நின்றுகொண்டிருந்தாள். அவள் சிரிக்க முயன்றுகொண்டே திலோத்தமையிடம் சென்றாள். ஒரு பெரிய மேஜை முன் போய் நின்றார்கள் இருவரும். அவர்களைச் சூழ்ந்து மற்ற சிப்பந்திகள் நின்றுகொண்டார்கள். ஒவ்வொரு சிப்பந்தியிடமும் அறிமுகம் செய்துவைக்கும் பொழுது ஒவ்வொருவரும் சிரித்துக்கொண்டே முன் கையை நீட்டினார்கள், 'ஷேக்–ஹாண்ட்' கொடுக்க! தன் தோழிகளுக்கு மட்டும் கை நீட்டினாள். இதற்குள் அவளையறியாமலே ஒரு ஆடவனின் கை பட்டு அவள் மெய் சிலிர்த்தாள்.

அப்போது அந்த அறைக் கதவைத திறந்துகொண்டு பில்லை போட்ட சேவகன் வந்து, "துரை வருகிறார்; துரை வருகிறார்!" என்று கட்டியங் கூறினான். அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் எல்லோரும் தத்தம் நாற்காலியில் தாவிப்போய் உட்கார்ந்தார்கள். அவசர அவசரமாக மேஜைமேல் இருக்கும் 'பைலை'ப் புரட்டி ஏதோ வேலை செய்வதாக பாவனை செய்தார்கள். ஊர்வசிக்கு இந்த கலாட்டாவில், அவள் எங்கே போய் உட்காரவேண்டும்; என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. அவள் பயத்துடன் அருகிலிருந்த நாற்காலியை இழுத்துப போட்டுக் கொண்டு, அடக்க ஒடுக்கத்துடன் உட்கார்ந்தாள்!

காரியாலய அதிகாரி சிப்பந்திகளை யெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு தம் அறைக்குள் போய் உட்கார்ந்தார். சிறிது நேரங் கழித்து காரியாலய சேவகன் ஊர்வசியிடம் வந்து, 'சலாம் செய்துவிட்டு. "உங்களை துரை கூப்பிடுகிறார்!" என்றான்.

"எங்கே யிருக்கிறார்? எப்படிப் போகவேண்டும்?"

சேவகன் ஊர்வசியைப் பார்த்துச் சிரித்து "வாருங்கள் என் பின்னுலேயே!" என்றான். ஊர்வசி அவனைப் பின் தொடர்ந்து சென்றாள். அவள் செல்லும்போது வழியில் உள்ள மற்ற சிப்பந்திகள் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ஒருவரையொருவர் காதைக் கடித்துக்கொண்டார்கள்.

முதல் நாள் பேட்டியில் மானேஜர் அவளைக் கூப்பிட்டு மிகவும் தன்மையாகப் பேசினார். அவரெதிரே ஒரு நாற்காலி போடச் சொல்லி, என்னென்ன வேலை என்பதையெல்லாம் விளக்கினார். அதெல்லாம் கேட்க அவளுக்குப் பிடித்தது. ஆனால் கடைசியில் அவர் கேட்ட கேள்வியான, "நீங்கள் இந்தப் பக்கமே ஓர் அறை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தனியாக வசிக்க முடியாதா?" என்பதுதான் பிடிக்கவில்லை.

"நீங்கள் சொல்வது புரியவில்லை!" என்றாள் ஊர்வசி. உடனே மானேஜர் சட்டென்று பேச்சை மாற்றி, "நீங்கள் இந்த என் அறையிலேயே உட்கார்ந்து வேலை செய்ய முடியாதா என்று கேட்டேன்...!" என்றார்.

"இப்பொழுது நான் என்ன வேலை செய்ய வேண்டும்?"

அந்த மானேஜர் சிரித்துக் கொண்டே சொன்னார்: "அவசரப்படாதீர்கள்! நான் மெள்ள மெள்ள வேலை கற்றுக் கொடுக்கிறேன். இந்த இரண்டு கடிதங்களை டைப் அடித்துக் கொண்டு வாருங்கள். நான்காவது நெம்பர் மேஜை மீதிருக்கும் 'டைப்ரைட்டிங்' மிஷினில் டைப் அடித்து வாருங்கள். அதுதான் உங்களுடைய மேஜை!"—அவள் கடிதங்களை வாங்கிக் கொண்டு, அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவுடன் எல்லோருடைய கண்களும் தன்னையே பார்ப்பதை உணர்ந்தாள். நான்காவது நெம்பர் மேஜையை அடைந்து 'டைப்ரைட்டிங்' மிஷினைத் திறந்தாள் ஊர்வசி. அப்பொழுது திலோத்தமா அவள் பக்கத்தில் வந்து "என்னடி

[தொடர்ச்சி பக்கம்—9]

சிறுகதை

புரஃபசர் சந்திரசேகர் தன் ஆராய்ச்சி சாலையில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். இயற்கையில் மறைந்து கிடந்த எத்தனையோ ரகசியங்கள் அவருடைய மூளையில் கேள்விக் குறிகளாகத் தோன்றிய பின் ஆச்சரியக் குறிகளாக நர்த்தனமாடிக் கொண்டிருந்தன. சூழ்நிலையை மறந்து அவரும் ஆராய்ச்சியும் ஒன்றாகி விட்ட சமயம்......

யந்திரங்கள் சுழன்றன; அவ்வீட்டுக் கருவிகள் மும்முரமாக வேலை செய்தன. அவருடைய கையிலிருந்த பென்சில் வெள்ளைத் தாளில் ஏதேதோ வேகமாகக் கிறுக்கியது. இயற்கையின் மர்மங்கள் எழுத்துக்களில் வரையறுக்கப்பட்டு சூத்திரங்களாகிக் கொண்டிருந்தன.

புரஃபசரின் முகத்தில் சிந்தனையும் மகிழ்ச்சியும் மாறி மாறித் தோன்றின. அவருடைய உத்தரவுக்காக அவருடைய உதவியாளர்கள் ஆவலுடனும் பணிவுடனும் காத்திருந்தார்கள். பிரசவமாகப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என அறியத் துடிக்கும் தந்தையின் ஆவல், பரிசோதனையின் முடிவை அறிவதில் அவர்களுக்கு இருந்தது.

பரிசோதனை மேலும் மேலும் தொடர்ந்து கொண்டிருந்தது. தனிமையை விரும்பியவர்போல் ஆராய்ச்சியைப் பிரதம உதவியாளரிடம் ஒப்படைத்துவிட்டு சிகரெட் ஒன்றை வாயில் பற்ற வைத்தபடியே சந்திரசேகர் தோட்டத்தை நோக்கி நடந்தார். சிகரெட்டிலிருந்து கிளம்பிய புகை மண்டலத்தில்கூட சூத்திரங்களே தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. தோட்டத்தின் நீரூற்றருகே உள்ள நாற்காலியில் அமர்ந்தார். இயற்கையின் அழகு அவருடைய இதயத்தைத் தொடவில்லை. உலகத்தின் உண்மைகள் அத்தனையும் எண்ணாகவும் எழுத்தாகவுமே அவருக்குப் புலப்பட்டுக் கொண்டிருந்தன.

"மிஸ்டர் சேகர்...!" — சங்கீதம் போன்று இனிமையாக ஒலித்தது ஒரு குரல்.

சிந்தனை எழுப்பும் மானசீக ஓசை தவிர, இதர பௌதீக ஓசைகளுக்கெல்லாம் அவர் செவிடாகியிருந்த நேரம் அது!

பெயர் சொல்லி அவரை அழைத்தது வேறு யாருமல்ல; அவருடைய அருமை மனைவி ஊர்மிளாதேவிதான்! அவர் சிலையாக வீற்றிருந்தார். இந்த நிலையொன்றும் ஊர்மிளாவிற்குப் புதிதல்ல! ஆனாலும்...

"மிஸ்டர் சேகர்......மிஸ்டர் சேகர்!"—அவள் உரத்துக் கத்தினாள்.

அவரோ......லௌகீக சூழல் எட்டிப் பிடிக்க முடியாத-மனித உணர்ச்சிகளின் ஆசாபாசங்கள் தீண்ட முடியாத, தூய்மையான அறிவு வெளியில் இரண்டற ஐக்கியமாகியிருந்தார்.

ஊர்மிளாவும் சிலையானாள்—சிந்தனையால் கட்டுண்டல்ல; சீற்றத்தால் தாக்குண்டு!

"விஞ்ஞானிகளே இப்படித்தான், ஊர்மிளா!"—இதுவரையில் நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டு அங்கே வந்த இலக்கியப் புரஃபசர் பிரபாகரன் விளக்கம் கொடுத்தார்.

ஊர்மிளாதேவி திரும்பிப் பார்த்தாள். மடிப்புக் கலையாத வெள்ளுடை அணிந்து, வாஸ்லின் தடவப் பட்டு வாரிவிடப் பட்ட கிராப்புடன், உலக இன்பங்களை ஏகபோகமாக அனுபவிக்கப் பிறந்த ஜீவன்போல் பிரபாகர் சிரித்துக் கொண்டு நின்றார்.

"வாருங்கள் பிரபாகர்......!" —குரலில் நடுக்கமும் குழைவும் தோன்ற வரவேற்றாள்.

மேற்கு வானில் சிகப்பை அழகோடு குழைத்து வாரி வீசி விட்டு, சூரியன் மறைந்து கொண்டிருந்தான். கிழக்கு வானில் பொன்னிறத் தட்டு போல் சந்திரிகை உதயமாகிக் கொண்டிருந்தாள்.

மந்த மாருதம் வீசும் சோலையும், மாலைக்கு இன்பம் வழங்கிப் பிரியும் சூரியனும், வழங்க வரும் சந்திரனும், இன்ப உணர்வுக்குத் தூபமிட்டு அறிவின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்திக் கொண்டிருந்தன.

"சேகரை யாரும் இப்பொழுது சுய நினைவுக்குக் கொண்டு வரமுடியாது ஊர்மிளா. உன் அன்பென்ன; உலகத்தின் எந்த சக்தியாலும் அது முடியாது. சேகர் நிர்மாணிக்க விரும்பும் 'எலக்ட்ரானிக் மூளை' — யந்திர மூளை — உருவாவதில் சேகர் வெற்றி காணுகிற வரையில் அவரும் ஒரு யந்திரம்தான்...... மனிதவாழ்க்கையின் உணர்ச்சிகள் — சிருஷ்டியை உந்திடும் பால் உணர்வு—ஆகிய யாவற்றையும் உறங்கிக் கிடக்கச் செய்யும் அறிவாற்றல் விஞ்ஞானிக்கு உண்டு..."

பிரபாகரனின் விளக்கம், ஊர்மிளாதேவியின் உள்ளத்தில் உணர்ச்சிப் பொறியொன்றைத் தோற்றுவித்தது.

"அப்படியானால் சேகர் என்னைக் காதலித்திருக்கவும் கூடாது; கல்யாணம் செய்து கொண்டிருக்கவும் கூடாது!"

"உண்மை அதுவல்ல ஊர்மிளா! சேகர் போன்ற வாலிபரைக் காதலிக்கும் பெண்ணுக்கு இளமை யுணர்ச்சிகளைத் தியாகம் செய்யும் மனப் பக்குவம் வேண்டும்..."

ஊர்மிளாவும் பிரபாகரும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, திடீரென்று புரஃபசர் சந்திரசேகரன் நாற்காலியிலிருந்து எழுந்தார். எழுந்தவர் இருவரையும் பார்த்து ஒரு புன்சிரிப்பு சிரித்தார். சிறிது நேரம்தான்; மீண்டும் சிந்தனைக் கீறல்கள் நெற்றியிலே தோன்றின. புதிதாக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடியே ஆராய்ச்சி சாலையை நோக்கி நடந்தார்.

ஊர்மிளாவின் முகத்தில் ஏமாற்றம் தென்பட்டது. பிரபாகரன், நீல வெளியில நீந்தி வரும் வெண்ணிலவை ரசித்தபடியே நின்றுகொண்டிருந்தார்.

"பிரபாகர், சேகர் எலக்ட்ரானிக் மூளை கண்டு பிடிக்க இன்னும் எத்தனை மாதங்களாகலாம்...?" என்று கேட்டுவிட்டு, ஊர்மிளா ஆவலோடு பதிலை எதிர்பார்த்தாள்.

"மாதங்களா? ஆண்டுகள் பல ஆகலாம். ஏன், நாளைக்கே கண்டு பிடித்தாலும் கண்டு பிடித்து விடலாம்...அல்லது வாழ்நாள் பூராவும் கண்டு பிடிக்க முடியாமலேகூடப் போய்விடலாம்..."

"அதுவரையில்......?"—அவளால் அதற்குமேல் பேச முடியவில்லை. ஏக்கத்தை வெளிப்படுத்தும் நிலையிலும், நிலவொளியில் அவள் கண்கள் பிரகாசமாக மின்னின.

பிரபாகர் பதில் எதுவும் சொல்லாமல் ஒரு பூவைப் பறித்து வாசனை பார்த்துக் கொண்டிருந்தார். 'கும்'மென்று எங்கிருந்தோ மனோரஞ்சித வாசனை கிளம்பியது.

* * *

இரவுகள் பகலாயின; காலம் உழைப்பாயிற்று. புரஃபசர் சந்திரசேகரின் மூளை எண்ணங்களை வார்த்து இயந்திரமாக்கிக் கொண்டிருந்தது.

அமீபாவில் ஆரம்பித்து, அறிவின் திறனால் அவனியை ஆளும் இயற்கையின் ஆற்றலை ஆட்டிப் படைக்கும் மனிதன் வரை, பரிணாம ரீதியாக வளர்ந்து வந்திருக்கும் மூளை பலத்திற்கே சவால்விடும் இயந்திர மூளை!

ஆம்; அந்த மூளையை உருவாக்கும் அரிய பணியில்தான் சேகர் ஈடுபட்டிருந்தார்!

இதோ, பகுதி பகுதியாக அது உருப்பெற்று விட்டது. கடைசிச் சோதனை; 'ஸ்விட்ச்' தள்ளப்படும்! பிறகு, பிரமிக்கத்தக்க கூட்டல்கள், பயங்கரமான பெருக்கல்கள், வகை வகையான கணித நுணுக்கங்கள் ஆகியவற்றிற்கு வேண்டிய பொழுது விடையளிக்கும் அற்புத சாதனம் தன் வேலையைத் துவங்கிவிடும்.

மனிதன் கணிப்பதில் தவறு நேர்ந்து விடலாம்; ஆனால் அவனால் ஆக்கப்பட்ட இயந்திரம் தவறின்றி கணிக்கும்!

மனித மூளை உழைப்பினால் களைப்படையும்; யந்திர மூளை களைப்பின்றி உழைக்கும்!

ஒன்று...இரண்டு...மூன்று... விர்...விர்ர்ர்........

புரஃபசருடைய மாணாக்கர்கள் தயாரித்துவைத்த கணக்குகளைப் போட்டனர். இயந்திரம் 'பளிச் பளிச்' சென்று பதில் சொல்லியது. மாணவர்கள் பிரமித்துப் போய் மேலும் மேலும் கேள்விகளை வீசினர். எலக்ட்ரானிக் மூளை பதிலளித்துக்கொண்டேயிருந்தது.

புரஃபசர் சந்திரசேகரோ தன்னுடைய அரிய சாதனையைக் கண்டு பரவசமானார். ஆடினார்; பாடினார்; அங்கு மிங்கும் ஓடினார்! ஆடையின்றி ஓடிய ஆர்க்கிமிடிஸ் கதை உண்மையாயிருக்குமென்று நம்ப அவர் செயல் ஆதாரமளித்தது!

"நண்பர்களே! இங்கேயே இருங்கள்; சிறிது நேரத்தில் வந்து விடுகிறேன்," என்று கூறிவிட்டு வேகமாகப் புறப்பட்டார்.

"அப்படியென்ன அவசரம், சார்?" என்றார்கள் மாணாக்கர்கள் ஆவலுடன்.

"அவசரம்தான்; என்னுடைய சாதனையை—கனவாகி விட்ட என் வாழ்க்கைக் கனவை—என் மனைவி ஊர்மிளாவிடம் சொல்லி, என் மகிழ்ச்சியை நான் அவளோடு பங்கிட்டுக்கொள்ள வேண்டும். இதோ, வந்து விடுகிறேன்," என்று கூறிவிட்டு வேகமாக வெளியேறினார்.

* * *

வெகு நேரமாகியும் வெளியே சென்ற புரஃபசர் திரும்பி

[தொடர்ச்சி பக்கம்—8]

8

சுருளிமலை, வழக்கமான அலட்சியத்தோடு பதில் சொன்னான்: "ஆமாம்; செத்தவளோட வாய் பேசினாலும் பரவாயில்லியே; அவளுடைய முந்தாணியிலல்ல பேசுச்சாம்!"

பொன்மணி, இன்னும் வியப்போடு "என்னடா தம்பீ என்னென்னமோ சொல்றே-புரியும்படியா சொல்லு!" என்று ஆவலைக் கொட்டினாள்.

"செத்தவங்க. தான் செத்ததும் இல்லாம ஊர்ல இருக்கிறவங்களையும் ஆபத்திலே மாட்டிவிடப் போய்ட்டாங்களே!" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான் சுருளிமலை.

"நீ விபரமாச் சொல்லப் போறியா இல்லியா?" என்று சற்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் சகோதரி.

"தூக்கு மாட்டிக்கிட்ட பிரேதத்தை பஞ்சாயத்தார் மூலமா போலீஸ்காரங்க வந்து எடுத்துக்கிட்டுப் போனாங்க! அங்க போயி பிரேதத்தை விசாரணை பண்ணினாங்களாம். அதுக்குப் பேரு பிரேத விசாரணையாம். தற்கொலைதான்னு முடிவு செஞ்சாங்களாம். அந்த சமயம், திடீர்னு பிரேதத்தோட முந்தானையிலே ஒரு முடிச்சு தெரிஞ்சுதாம். அதை அவிழ்த்துப் பாத்தா அதிலே ஒரு கடிதம் இருந்துதாம். அதைப் படிச்சாங்களாம்.

"அதிலே, 'நான் தற்கொலை செய்துகொண்டதற்குக் காரணம்; அந்தப் பாவி தீச்சட்டி சிங்காரந்தான்'— அப்படின்னு எழுதியிருக்குதாம்."

இதை அவன் சொல்லி முடிப்பதற்குள், பொன்மணிக்கு உடம்பெல்லாம் நடுக்கமெடுத்து நாக்குழறிவிட்டது.

"அய்யய்யோ! இது என்னடா புது வம்பு! தம்பீ, அவர் இங்க கம்பவீட்லதானே இருக்காரு..." என்று பீதியோடு கூறினாள். சுருளிமலை பரபரப்படையாமல் உள்ளே எழுந்து சென்றான்.

அவனைக்கண்டதும்சிங்காரம், "சுருளிமலை! மைனா எங்கே? என் மைனா எங்கே?" என்று கத்தினான்.

"மைனாவாவது — குருவியாவது!" முணுமுணுத்தான் சுருளிமலை.

"ஒண்ணும் சொல்லாதேடா கண்ணு! அண்ணனுக்கு பேய்ச் சேட்டை! தூக்கு மாட்டிக்கிட்டவள் பேயா மாறி அண்ணன் மேல தொத்திகிட்டாள்!" என்று சமாதானம் கூறினாள் கற்பூரம்.

"ஊம்! தொத்திக்கிட்டது மாத்திரமா—உங்க அண்ணனையும் கூடவே அழைச்சிகிட்டு போய்டுவா போலிருக்கு! இவராலதான் தற்கொலை பண்ணிகிட்டேன்னு, பழியை இவர் மேல சுமத்தி கடிதாசு எழுதி வைத்திருக்கிறாளாக்கும்."

சிங்காரம் திடுக்கிட்டான்.

"ஆ! என் மைனாவின் சாவுக்கு நானா காரணம்? அய்யா—கடவுளே! நான் ஒரு பாவமும் அறியேனே! மைனா! மைனா!! என்னாலயா நீ செத்தாய்! எனக்கு ஒண்ணுமே புரியலியே! தயவு செய்து என்னை அவிழ்த்து விடுங்களேன்!!"

அவன் அலறலை அடக்கியவாறு, கற்பூரம் "என்னண்ணே உனக்குப் பைத்தியமா? உளராதே! மைனாவாவது மண்ணாங்கட்டியாவது!... தெய்வமே! தெய்வமே! இப்படி எழுதலாமா எங்க தலையிலே! ஆபத்தில காப்பாத்தப் போனதுக்கு அவதூறு வந்து சேர்ந்துதே!... அதோட அண்ணன் மூளையும் கெட்டுதே! ஏ, பிசாசே!... எங்க அண்ணனை விட்டுப் போறியா இல்லியா?" என்று தன் கூச்சலை ஆரம்பித்தாள்.

அவளை அடக்குவது பூஞ்சோலைக்குப் பெரிய வேலையாகப் போய்விட்டது. தெருப் பக்கம் நாலைந்து பேர் நடந்துவரும் ஒலி கேட்டு சுருளிமலை வாயிற்புறம் திரும்பினான். கனமான பூட்சுகள் கட்டாந்தரையில் படுவதால் எழும்புகின்ற பயங்கர சப்தமுடன் போலீசார், வீடு நோக்கி வருவதைக் கவனித்தான் அவன். மளமளவென்று தெருவுக்கு வந்து போலீசாரை எதிர்பார்த்து நின்றான்.

போலீசார், சுருளிமலையிடம் "எங்கே அவன்?" என்று வினவினர்.

"யார்?" என்றான்.

"அவன்தான் தீச்சட்டி சிங்காரம்!"

"சிங்காரமா? அந்த ஆளுக்குப் பிசாசும், பைத்தியமும் சேர்ந்து பிடிச்சு இப்பத்தானே இந்தப் பக்கமா ஓடினாரு! சீக்கிரம் போங்க, பிடிக்கலாம்!" என்று சாதாரணமாகச் சொன்னான் சுருளிமலை.

போலீசார் அவன் காட்டிய திக்கில் விரைந்து சென்றனர். அவர்கள் போனதும் சுருளிமலை, உள்ளே சென்று கதவைத் தாழ்போட்டான். அம்மாவையும், அக்காளையும் கூப்பிட்டான். "ஆபத்து! ஜாக்ரதை! இவரை வெளியே போகவே விடக்கூடாது. போனால் அவ்வளவுதான்!"— என்று எச்சரித்தான். பொன்னையாவுக்குப் போலீசாரை ஏமாற்றுவது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. "லொக் லொக்" என்று இருமிக் கொண்டே சுருளிமலையைக் கூப்பிட்டு, "அடேய்! நமக்கேண்டா இந்த வம்பு வழக்கெல்லாம்!" என்று அதட்டினார்.

சுருளிமலை, அப்பாவுக்குப் பதில் சொல்லவில்லை. அவருடைய பேச்சைக் கணக்கிலே சேர்க்காதவன்போல, கற்பூரத்தைப் பார்த்து—"நீ உன் வீட்டுக்குப் போ! எல்லாம் நாங்க பாத்துக்கிறோம்— நீ யாருக்கிட்டேயும் எதையும் உளராதே! நீயும் வீட்ல இல்லேன்னா போலீசுக்கு சந்தேகம் அதிகரிக்கும்." அன்று அறிவித்தான்.

கற்பூரமும் தான் எதிர்பார்த்தபடி சந்தர்ப்பம் கிடைத்தது என்ற திருப்தியும், எதிர்பாராத குற்றச்சாட்டு அண்ணன் மீது சுமத்தப்படுகிறதே என்ற ஏக்கமும் ஒன்றையொன்று மோதிட, அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, இஷ்ட தேவதையைப் பிரார்த்தனை செய்து விபூதி யெடுத்து அண்ணனின் நெற்றியில் தடவி விட்டு வீட்டுக்குப் புறப்பட்டாள், கொல்லைப்புற வழியாக!

சுருளிமலை சிறிது நேரம் மௌனமாக சிங்காரத்திற்குப் பக்கத்திலே உட்கார்ந்திருந்தான். தன் பேச்சுக்கும், கூச்சலுக்கும் அந்த வீட்டில் மதிப்பில்லாமல் போய் விட்டது என்பதையும், தன் புலம்பலைப் பேய்க் கூச்சல் என்று அவர்கள் கருதியிருப்பதையும் எண்ணி எண்ணி உள்ளுக்குள் வேதனைப் பட்டுக் கொண்டிருந்த சிங்காரம், மெதுவாக அன்புடன் சுருளிமலையை "தம்பீ!" என்று அழைத்தான்.

உடனே பூஞ்சோலை பயந்து போய் சுருளிமலையின் கையைப் பிடித்து "அடடா! நீ இங்கே உட்காராதே! மெதுவா பேசிகிட்டே பிசாசு உன்மேலே பாய்ந்துவிடும்!" என்று இழுத்துக்கொண்டு அடுக்களைப் பக்கம் போய்விட்டாள்.

சுருளிமலை மௌனமானான். அவன் கண்களிலிருந்து நீர் பெருகி, காதோரத்தில் வழிந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் கையை அசைக்க முடியாமல் தவித்த அவனது சங்கடத்தைப் பொன்மணி பார்த்து விட்டு அருகே வந்தாள். தனியாக வருவதற்கு அவளுக்கு அச்சந்தான். இருந்தாலும் அச்சத்தையும் மீறிக்கொண்டு இரக்க சுபாவம் தலையெடுத்தது. "அழாதீங்க!" என்று கூறி அவன் கண்ணீரை ஒரு துணியால் துடைத்து விட்டாள்.

என்ன காரணத்தாலோ, வீட்டுக்குப்போன கற்பூரம் திரும்பி வந்தவள், அந்தக் கண் துடைக்கும் காட்சியைப் பார்த்துவிட்டு உள்ளுக்குள் பேரானந்தமுடன் யாருக்கும் தெரியாமல் மறுபடியும் போய்விட்டாள். அவளுக்கு நம்பிக்கை தோன்றி விட்டது. பொன்மணிக்கும் சிங்காரத்திற்கும் எப்படியும் நேசம் முற்றிவிடும் என்று அவள் கணக்குப் போட்டு தன் தந்திரத்தைத் தானே பாராட்டிக் கொண்டாள். வாழா வெட்டியான மைனாவுக்குத் தன் அண்ணன் கணவனாகக் கூடாது என்று நினைத்தாள். நினைத்த மறு நாளே மைனா, தன் குடும்ப கௌரவத்தில் குறுக்கிடாமல் இந்த உலகத்தைவிட்டே போய் விட்டது அவளுக்குப் பெரிய திருப்தி.

பொன்மணிதான் சிங்காரத்திற்கு மனைவியாக வேண்டுமென்று கற்பூரத்திற்கு ஏன் அவ்வளவு கவலை? பொன்மணி, பேரழகி! அந்த அழகுப் பதுமை தன் தமயனுக்குப் பெண்டாக வேண்டுமென்று நினைத்தாளா? அல்ல — அழகுக்காக அல்ல! பொன்மணி, அருங்குணவதி! குணத்திற்காகத் தன் குடும்பத்து மணப்பெண்ணாக வேண்டும் அவளென்று கருதினாளா? இல்லை—குணத்திற்காக இல்லை! பின் எதற்காக? பொன்மணியை எப்படியாவது தன் அண்ணனுக்கு முடிச்சுப்போட வேண்டும் என்று விரும்பினாளே தவிர, அண்ணனுக்குப் பொன்மணியைத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டதில்லை. சுருக்கமாகச் சொன்னால் அவள் ஆவல் எல்லாம் பொன்மணியின் திருமணத்தைப் பற்றியதுதானே தவிர, அண்ணன் சிங்காரத்தின் திருமணத்தைப் பற்றியதல்ல!

அண்ணனைவிட அப்படி யென்ன ஒரு தோழியிடம் அவ்

வளவு அக்கரை அவளுக்கு? பொன்மணியை இன்னொருவன் விரும்புகிருன். அவளுக்காகத் தவங்கிடக்கிருன். அவள் கண் அசைத்துவிட்டால் போதும்; காலடியிலேயே கிடந்து ஆயுள் முழுதும் அடிமை வேலை பார்க்கவும் அவன் தயாராக இருக்கிருன். அவன் பொன்மணியை அடையக்கூடாது என்பது கற்பூரத்தின் எண்ணம். அவனே, 'அடைந்தால் பொன்மணியை அடைவேன், இல்லையேல் சாவேன் என்று சபதம் செய்து கொண்டிருக்கிருன். பொன்மணியிடம் அவன் காதல் பிச்சை கேட்ட காட்சியை கற்பூரம் நேரிலேயே கண்டிருக்கிருள். தான், பொன்மணியிடம் கெஞ்சுவதை யாருமே பார்க்கவில்லையென்றுதான் அவனுக்கு நினைப்பு — ஆனல் இடிந்துபோன மண்டபத்தின் இடுக்கு வழியே இரு விழிகளையும் செலுத்தி கற்பூரம், அந்தக் காதல் யாசகத்தை இமை கொட்டாமல் பார்த்திருக்கிருள்.

பக்கத்து ஊரிலே சென்று பானை சட்டிகளை விற்று வருவதற்காக அதிகாலையிலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டாள் பொன்மணி. பெரிய கூடை நிறையப் பானைகளை அடுக்கிக் கொண்டு, ஒரு கையால் தலையிலுள்ள கூடையைப் பிடித்து, இன்னொரு கையை அழகாக அசைத்துக் கொண்டு அவள் நடந்து போகும் எழிலே அலாதி! வெண்ணீர்ப்பானை முதல், தடுகு வைக்கும் கலயம் வரையில் எல்லாவற்றையும் தட்டிப் பார்த்துவிட்டுக் கடைசியில் ஒரு சட்டியை முக்காலணுவுக்கு வாங்கிக் கொண்டு, கொடுத்த காசில் சந்தேகமுள்ள ஒரு காலணுவைத் தட்டிப் பார்த்தால் "அடியம்மா! செல்லாக் காசாம் — தட்டிப் பார்க்கிறதைப் பாரு!" என்று கோபித்துக் கொள்ளும் உலகத்திலே எல்லோரிடமும் நல்லவிதமாகவும் ஆனல் கண்ணியம் கெடாமலும் நடந்து கொண்டு பொன்மணி மண்பாண்ட வியாபாரத்தை வெற்றிகரமாகச் செய்து வந்தாள்.

அன்றைக்கும் அதே உற்சாகத்துடன் தான் வியாபாரத்திற்குக் கிளம்பினள். என்றும் போல பக்கத்து ஊர் வெள்ளிச் சந்தையில் சரியான வியாபாரம். காசை முடிந்துகொண்டு, களிப்பை அடக்கமுடியாமல், வெறுங் கூடையுடன் ஊருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள்.

என்றுமில்லாத அதிசயமாக அன்றைக்கு வழியிலே அதிக ஜனநடமாட்டமில்லை. பொழுது போவதற்குள் வீட்டிற்குத் திரும்பிவிட வேண்டுமென்று வேகமாக நடந்தாள். பாதி தூரம் வருவதற்குள்ளாகவே வானம் இருண்டது. இடியும் தொடர்ந்து மழைத் தூறலும் தொடர்ந்தன!

பொன்மணி இன்னும் வேகமாக நடந்தாள். மழை கனமாகவே வந்துவிட்டது. பொன்மணியின் உடையெல்லாம் நன்கு நனைந்து தந்தம் போன்ற அவள் அங்கங்கள் காண்போரைக் கொல்லும் விதத்தில் அழகு சிந்திக்கொண்டிருந்தன. முழங்காலுக்கு மேல் ஆடையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, கூடையைத் தலையில் கவிழ்த்தவாறு ஓட்டமும் நடையுமாக மழையைச் சமாளிக்கப் பார்த்தாள்.

அப்போது அவளுக்குப் பின்னே ஒரு வண்டி வரும் ஓசை கேட்கவே சாலையோரத்தில் ஒதுங்கி நின்றாள். வண்டி நின்றது. "பொன்மணி! வண்டியில் ஏறிக்கொள்வேன், அடடா! நன்றாக நனைஞ்சுட்டியே...";—என்று அனுதாபத்துடன் கீழே இறங்கினன் கரகமாடிக் கண்ணன்.

பொன்மணிக்கு வெட்கம் தாங்கவில்லை. கூடையால் முகத்திலிருந்து இடுப்புவரையில் மறைத்துக் கொண்டு பேசாமல் நடந்தாள்.

கண்ணன் அவளைத் தொடர்ந்து, "அடடா! பைத்தியமா இருக்கியே — சும்மா வண்டியிலே ஏறிக்க! நான் வேணும்னு கண்ணை மூடிக்கிறேன். நீயேன் வீணு கூடையைக் குடையா பிடிச்சுகிட்டு கஷ்டப் படுறே!"—என்றவாறு அவள் கையிலிருந்த கூடையை வாங்கி, வண்டியில் வைத்துக் கொண்டு அவளையும் ஏறிக்கொள் என்று ஜாடை செய்தான், கண்களை மூடிக் கொண்டது போல பாசாங்கு செய்து!

பொன்மணிக்கு வண்டியில் ஏற இஷ்டமில்லை. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரு பாழடைந்த கோயில் மண்டபம். விர்ரென அந்த மண்டபத்திற்குப் பாய்ந்தோடினள். பழமையாகிவிட்ட அந்தக் கோயில், ஓரளவு மழையைத் தடுக்க உதவியது. ஆனல் கண்ணன் விடவில்லையே—அவனும் மண்டபத்திற்கு ஓடி வந்தான். இப்போது பொன்மணிக்கு முகம் விகாரமாகமாறி விட்டது. இதுவரையில் அவனது பேச்சிலும் நடத்தையிலும் கண்டுபிடிக்க முடியாத ஆர்த்தத்தை இப்போது அவன் மண்டபத்திற்கு வந்ததும் அவள் கண்டுபிடித்து விட்டாள்.

"பொன்மணி!" என்றான்.

"போதும்! போதும்!! போய் விடுங்கள்; தயவு செய்து!" என்று கடுகடுத்தாள்.

"என்னைப்பத்தி உனக்குத் தெரியாது! அல்லும் பகலும் உன்னையே நினைச்சு நினைச்சு அனலிலே புழு மாதிரி உருகுறேன் — இதோ பாரு; இவ்வளவு மழை பெய்யுது! இந்த ஈரத்திலே கூட என் உடம்பு கொதிக்குது! எத்தனையோ நாளா தவம் இருக்கிறேன்; உன்னை தரிசனம் பண்ணனுமனு! இன்னைக்குத்தான் தெய்வம் கிருபை பண்ணியிருக்கு......"

"தெய்வத்துப் பேரை அனுவசியமாக இழுக்காதிங்க! எதுவும் பேசமா போய்டுங்க! இதெல்லாம் நல்லா இல்லே!"

"நல்லா இல்லியா? என்னைப் பாரு பொன்மணி! என்னுட்டம் ஆணழகன் இந்த ஊரிலேயே இல்லேங்கிறங்க...என் அரும்பு மீசை துடிக்கிறதைப்பாரு...... இதையெல்லாம் நானே சொன்னு நல்லா இருக்கா? நீயில்ல சொல்லணும்! ஒரு வார்த்தை சொல்லு; உன்னை நான் கல்யாணம் செய்துகிட்டா, தலையிலே கரகத்தையா தூக்கி வச்சுகிட்டு ஆடுவேன்-உன்னையே தூக்கி வச்சுகிட்டு, கங்கையை வச்சுகிட்டு ஆடுற பரமசிவன் மாதிரி ஆடுவேன்!"

"வீண்பேச்சு பேசாதிங்க! அப்புறம் நான் பொல்லாதவளாயிருப்பேன்; ஆமாம்!"

"பொல்லாதவளா? என்ன செய்வே?......அடேய் அப்பப்பதே!—என்று என்னை கட்டித் தழுவி, கன்னத்தைக் கிள்ளி..."

"சீ! சீ! சீ! நிறுத்துங்க! மரியாதையாப் பேசுங்க!"

"மன்னிச்சுக்க பொன்மணி! என்னை நீதான் காப்பாத்தணும்! செய்தா உன்னைக் கல்யாணம் செய்றது; இல்லேன்னு பிரமச்சாரியாவே இருக்கிறது— இது சத்தியம்! என்ன சொல்றே?"

பொன்மணி, சிறிது நேரம் மௌனமாக ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மழை விட்டிருந்தது. சிறிது தூறல் மட்டுமே விழுந்து கொண்டிருந்தது.

"யாருமே இல்லே இங்கு! வெட்கப்படாதே!" — என்று அருகே நகர்ந்தான் கண்ணன். அவனுக்குத் தெரியாது; கற்பூரம் மழைக்காக மண்டபத்தில் ஒதுங்கி அந்த நாடகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த செய்தி!

கண்ணன் அருகே வந்ததும், பொன்மணி அவனை ஆத்திரத்தோடு பார்த்து, "கல்யாண விஷயமெல்லாம் என் பெற்றோர்களிடம் பேசுங்கள் என்கிட்ட பேசி என்ன புண்யம்!", என்று கூறிவிட்டு வேகமாக ஓட ஆரம்பித்தாள்.

அதற்கு மேல் அவளைத் தொடர்ந்து தொல்லை கொடுக்க கண்ணன் விரும்பவில்லை. பொன்மணிக்குத் தன்மீது அன்பு இருக்கிறது; அதைக் காட்டிக் கொள்ளாமல் இருக்கிருள் என்று எண்ணிப் பூரிப்படைந்தான்.

அவனுடைய வண்டியும் சேறு நிரம்பிய சாலையில் மெதுவாக நகர்ந்தது.

நீண்ட பெருமூச்சோடு, கற்பூரம் மண்டபத்திலிருந்து வெளியே வந்தாள். அப்போதே அவள் தீர்மானம் செய்துவிட்டாள்; பொன்மணியை எப்படியாவது கண்ணனுக்குக் கிடைக்காமல் செய்துவிட வேண்டுமென்று!

காரணம்; கற்பூரம் அந்தக் கண்ணனின் அழகில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தாள்.

தொடரும்

அரசியல் சட்டத்தைத் திருத்துக!

"இந்தியா ஒரே நாடு; நாம் எல்லோரும் இந்தியர்; நம் மொழி இந்தி' என்று கருதிவந்த நிலைமுறை மறைந்து வருகிறது. புதிய நிலைமுறை உருவாகி வருகிறது. இந்தியா ஒரு துணைக்கண்டம் என்றும், அதில் வாழும் மக்கள் பல்வேறு இனத்தவர் என்றும் கருதப்பட்டு, தனி நாடுகளுக்காகப் பிரிவினை கோரப்பட்டுவருகிறது. எனவே, இந்தியாவின் ஆட்சிமொழி பற்றிய இந்தப் பிரச்சினைக்கு இப்போது ஒரு முடிவு காண்பதற்கில்லை.

நம்மை மட்டும் கட்டுப்படுத்துவதானல் அவசரப்பட்டு முடிவு செய்துவிடலாம்; அதனல்தான் ஒரு சாரார், இப்போதே முடிவு கட்ட வேண்டும் என்று கூறுவதை ஆட்சியாளர் ஏற்கத் தயங்குகிருர்கள். அதைக்கண்டு நான் அவர்களைப் பாராட்டுகிறேன்—அதனை வரவேற்கிறேன்.

இந்தியாவின் ஆட்சி மொழி பற்றி இப்போதைக்கு இருக்கக்கூடிய ஒருமித்த கருத்து எல்லாம் 1965—ம் ஆண்டு நேரவிருக்கிற ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்—ஆங்கிலம் நீடிக்கப்பட வேண்டும் என்ற அளவில் தான்! அந்த அளவில்தான் சமரசம் தேடப்பட்டது.

இப்போது அரசியல் சட்டத்தில் 1966—க்குப் பிறகும் காலவரையின்றி ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட வேண்டும். அது இந்த யாதாஸ்திற்கு வலிவையும், உயிரையும் தரும். அதற்கான அரசியல் தப்ப—வெப்ப நிலை இப்போது சாதகமாக இருக்கிறது- அப்படிச் செய்வது வங்காளம், பஞ்சாத், மராட்டியம் போன்ற மற்ற மாநிலங்களுக்கும் வழி காட்டியாக இருக்கும். அதனல் தான் நாங்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம்.

'நீங்கள் 15 பேர்; அந்தத் நாங்கள் 150 பேர் எற்றுக் கொள்ளுவதா?' என்று பாராமல் எதிர்காலத்தில் ஆபத்தைத் தவிர்க்க அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டிக்கொள்கிறேன்.

சட்ட மன்றத்தில் அறிஞர் அண்ணா

மு. கருணாநிதி
தஞ்சை மாவட்ட சுற்றுப்பயணம்

மே 10, 11-ம் நாட்களில் திருவாரூரில் நடைபெறும் தஞ்சை மாவட்ட தி.மு. கழக மூன்றாவது மாநாட்டினை யொட்டி, ஏப்ரல் மாதம் 11-ந் தேதி முதல், நானும் மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணத்தை மேற்கொள்கிறோம்.

மாநாட்டுக்குக் குறைந்தது நூறு ரூபாய் நிதி தருகிற ஊர்களுக்கே சுற்றுப்பயணம் வகுக்கப்படும்.

கூட்டம் தேவையென நேரிலும் கடிதமூலமும் தெரிவித்துள்ள தோழர்கள், மார்ச் 29-ந் தேதிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு நிதித்தொகையும் வழிச்செலவுத் தொகையும் அனுப்பி வைத்தால் உடன் தேதி குறித்து அனுப்ப வசதிப்படும்.

மு. கருணாநிதி
'முரசொலி', சென்னை-6

பாவ மன்னிப்பு...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

வரவில்லை......பல மணி நேரம் ஆகிவிட்டது......மாணாக்கர்கள் பொறுமை இழந்தனர். புரஃபசரின் இல்லத்தை நோக்கி ஓடினர்.

பூதவுடலில் அவர் அங்கு இல்லை; புகழுடம்பு எய்திவிட்டிருந்தார்! அற்புதமான சிந்திக்கும் கருவியை அமைத்த விஞ்ஞானி சிந்தனை நின்று போன பிணமாகக் கிடந்தார்.

ஊர்மிளாதேவி, காலியாகிக் கிடந்த 'பொட்டாசியம் சயனைடு' பாட்டிலைக் கையில் வைத்து, குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்; இலக்கிய புரஃபசர் பிரபாகர் ஊர்மிளா தேவிக்குத் தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

புரஃபசர் சந்திரசேகர் தற்கொலை செய்து கொண்டு விட்டார்!

காரணம் யாருக்கும் விளங்கவில்லை; மர்மமாகவே இருந்தது! வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடித்த நேரத்தில் அவர் தற்கொலை செய்து கொண்ட காரணம் புரியாத புதிராகவே போய் விட்டது. ஆனால் தற்கொலை செய்து கொள்ளுமுன் தன்னுடைய சொத்துக்கு ஏகப் பிரதிநிதியாக மனைவியை ஆக்கிவிட்டு, தான் கண்டு பிடித்த அதிசய மூளையின் உரிமையையும் மனைவிக்கே சொந்தமாக்கி 'மரண சாசனம்' ஒன்றையும் எழுதி வைத்திருந்தார்.

புரஃபசரின் உடல் அவருடைய தோட்டத்தில், அவர் உட்கார்ந்து சிந்திக்கும் நீரூற்றுக்கு அருகிலேயே சமாதி வைக்கப்பட்டது.

* * *

காலம் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

அந்த ஆண்டு, பௌதீகப் பிரிவில், ஒரு பெரிய சாதனையைச் செய்து முடித்ததற்காக சந்திரசேகருக்கு 'நோபல் பரிசை' வழங்கி இறந்த விஞ்ஞானிக்கு மரியாதை செய்தனர். கணவரின் சார்பாக, துக்கத்தை வெளிப்படுத்தக் கறுப்புடை அணிந்து ஊர்மிளாதேவி பரிசைப் பெற்றுக் கொண்ட காட்சி எல்லோருடைய உள்ளத்தையும் உருக்குவதாக இருந்தது.

'எலக்ட்ரானிக் மூளை'யைக் கண்டுபிடித்து, நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிட எத்தனையோ அறிஞர்கள் முன் வந்தனர். கம்பெனிகள் உரிமை கோரி, ஏராளமாகப் பணம் அட்வான்ஸ் செய்தன. ஆனால் அவருடைய வாழ்க்கையை எழுதி வெளியிடும் உரிமையை ஊர்மிளா தேவி யாருக்குமே அளிக்கவில்லை.

கொஞ்ச காலத்துக்குப் பின் ஊர்மிளாவும் பிரபாகரும் சேர்ந்தே காலஞ் சென்ற புரஃபசர் சந்திரசேகரின் வாழ்க்கையை எழுதி வருவதாக ஒரு வதந்தி உலவியது.

வதந்தி உண்மையாகிப் புத்தகம் வெளி வந்தபோது, அது எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. அதைவிடப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால் புத்தகத்தின் தலைப்பு 'பாவ மன்னிப்பு!' என்று இருந்ததுதான்.

புத்தகம், சேகரின் வாழ்க்கை வரலாறாக மட்டும் இல்லை; பிரபாகர் — ஊர்மிளாவின், குறிப்பாகப் பிரபாகரின் இலக்கியப் படைப்பாகவே இருந்தது.

புத்தகம் கீழ்க் கண்ட வரிகளோடு முடிந்திருந்தது:

"இயற்கையின் ரகசியங்களைக் கண்டறிகிறான் விஞ்ஞானி; ஆனால் இதயத்தின் ரகசியங்களைக் கண்டறிய அவன் முயற்சிப்பதே இல்லை! குவலயம் நலமடைய வேண்டுமென்பதற்காக எலும்பை உருக்கி, தசையைப் பிழிந்து உழைக்கிறான். அந்த உழைப்பின் உற்சாகத்தில் குடும்பம் என்ற ஒன்று இருப்பதையே அடியோடு மறந்து விடுகிறான். யந்திரங்களோடு பழகிப் பழகி யந்திரமாகி விடுகிறான். யந்திரங்களை சிந்திக்க வைக்கும் முயற்சியில், தன் சிந்தனையை ஸ்தம்பிக்க வைத்து விடுகிறான். உலகத்தின் புதிர்களை அவிழ்ப்பவன், தானே புதிராகி விடுகிறான்... உணர்ச்சிகளை அடியோடு ஒதுக்கிவிட்டு, அறிவுக்காகவே வாழும் அவன் அனுதாபத்தோடு பராமரிக்கப்பட வேண்டியவன். உலகம் மகிழ்ச்சியோடு இயங்க, இரவு பகலின்றி உழைக்கும் விஞ்ஞானியைப் புரிந்துகொண்டு அணைக்க மிகப் பெரிய தியாக உணர்வு வேண்டும். அந்த உணர்வின்மையால் குற்றமிழைத்தவர்கள், தேடக்கூடிய ஒரே கழுவாய், அடைய விரும்பும் பாவ மன்னிப்பு, குற்றத்தை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளுவது தானே?"

புரஃபசர் சந்திரசேகரின் மரணம் பற்றிய மர்மத்திற்கான விளக்கம் புத்தகத்தின் தலைப்பிலும், கடைசி வரிகளிலும் மறைந்திருப்பதாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

ஃ

இரண்டாவது இதழ் நாடெங்கும் விற்பனையாகிறது!

அரசியல் வானில் புதுமையான பத்திரிகை!

"அண்ணா"

ஆசிரியர்:
டி. என். இராவணன்

தி. மு. க. வார ஏடு
விலை 10 காசு

[விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை. மாதிரி பிரதிக்கு இரண்டு 10 காசு தபால் தலைகள் அனுப்பவும்.]

'அண்ணா'
26, பீரோஜ் சாயபு தெரு,
சென்னை—14

வான்மதியும்...

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

லுடன் சேராமல், நான் முதன் முதல் காதலித்த என் காதலியையே கடைசிவரைக் காதலித்து வாழ விரும்புகிறேன்! நான் என் காதலிமீது கொண்டுள்ள அன்பைக் கண்டு நீயும் எங்கள் காதல் நீடூழி வாழ வாழ்த்துவாயென எண்ணுகிறேன்.

அடாடா...வான் மதி!...என்ன; நான் பேசிக்கொண்டேயிருக்கிறேன்!.........நீ எங்கேயோ மறைந்துவிட்டாயே!...வான் மதி!...அடா! அந்தத் துரோகிகளை—அந்த முகில் கூட்டங்களைப் பார்த்தாயா?......நான் உன்னிடம் உரையாடிக் கொண்டிருப்பதில் அவைகளுக்குக்கூடப் பொறுமை போலும்! ஐயகோ! உன்னைத் தழுவி மறைக்கும் அந்த முகிற் கூட்டங்களுக்கு நான் என்ன தவறு செய்தேன்!... ஊம்!...இன்னா செய்தார்க்கும் இனியவே செய்!...அவர்களை நீயும் மன்னித்துவிடு வான்மதி!...சரி!...மிக மிக நேரமாகிவிட்டது! நான் கூறியதை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு உறங்காமல் கண்ணீர் உகுக்காதே!... எல்லாவற்றையும் மறந்துவிட்டு, நிம்மதியாக உறங்குவாயாக!...என்னையும் என் காதலி அழைக்கிறாள்! நான் வருகிறேன்!...

[வள்ளுவர் தன் காதலியுடன் கைகோர்த்துச் செல்லும் இனிய காட்சியைக் காண்பதற்குள் இந்தப் பாழும் அலாரம் கெடிகாரம் அலறுகிறதே!...]

—"இன்பபுரியான்"

முரசொலி
சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

சேலம் - கோவை - நீலகிரி மாவட்டங்களின்
உள்ளாட்சி மன்றங்கள் (ஸ்தல ஸ்தாபனங்கள்)

டாக்டர் K. R. கோபால்

தொகுதித் தேர்தல்

31—3—58-ல் நடைபெறுகிறது

சேலம் நகராட்சி உறுப்பினரும், கூட்டுறவு இயக்கங்களில் ஈடுபாடு கொண்டவரும், பொது வாழ்க்கைத் துறையில் நீண்ட நாட்களாகப் பாடுபட்டு வருபவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்துத் தணியா ஆர்வங் கொண்டு அரும்பணி ஆற்றி வருபவரும் ஆன தோழர் கோபால் (டாக்டர் கே. ஆர். கோபால்) அவர்களுக்குத் தங்கள் முதல் வாக்கைக் கொடுத்து ஆதரிக்குமாறு தொகுதி வாக்காளர்களாகிய கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும் பிற நண்பர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்.

முதல் சம்பளம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சொன்னார் மானேஜர்?'' என்று கேட்டாள்.

''அவர் இந்த இரண்டு கடிதங்களை டைப் அடித்து வரச் சொன்னார்.''

''ப்பூ! இவ்வளவுதானா?''—திலோத்தமா ஸ்வரம் போட்டுக் கேட்டாள்.

''ஆமாம்!''

''அப்படியானால் வேறு ஒன்றுமே கேட்கவில்லையா?''

ஊர்வசி தலையைத் தொங்க விட்டுக் கொண்டு ''ஆமாம்; கேட்டார்,'' என்றாள்.

''எனக்குத் தெரியுமே! ம்...... என்னென்ன கேட்டார்?''

''வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்று கேட்டார். உண்மையைச் சொன்னேன், என் தாயாரும், மூன்று சகோதரர்களும் இருக்கிறார்கள் என்று.''

''பைத்தியக்காரிடி நீ! இப்படி உண்மையைப்போய் யாராவது சொல்வார்களா?''

''ஏன்? என்ன அதற்கு?''—ஊர்வசி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''அடி ஊர்வசியே! நீ உண்மையைச் சொல்லியிருக்கக் கூடாது. 'நான் தனியாகத்தான் இருக்கிறேன்; எனக்கு அண்ணனோ, தம்பி தங்கைகளோ; பெற்றோரோ யாருமில்லை. தனியாள்தான் நான்; தனியாகத்தான் வாழ்கிறேன்' என்று சொல்லியிருக்கணும்?''

''எதற்காக அப்படிச் சொல்லணும்? அப்படி ஏன் பொய் சொல்லணும்?''

''சின்னப் பொண்ணு! ஒன்றும் தெரியாது குழந்தைக்கு! நீ எதற்காக காலேஜில் படித்தாயடி? பணத்தைக் கரைக்கவா?

ஊர்வசி இதைக் கேட்டு பயந்து கொண்டே, ''திலோத்தமா! இந்த காரியாலயத்தில் நான் வேலை பார்க்க முடியாது போலிருக்கிறதே! நீதான் ஒரு வழி சொல்லித் தரணும்,'' என்றாள்.

திலோத்தமா சிரித்துக் கொண்டே, ''இதைப் போய் மானேஜரிடம் சொல்!'' என்றாள்.

●●●

இது நடந்து சில நாட்களுக்குப் பிறகு ஊர்வசிக்கு இன்னும் பலபல புது அனுபவங்கள் ஏற்பட்டன. இரண்டு மூன்று முறை அவள் காரியாலயத்தில் 'ஓவர் டைம்' வேலை செய்யவேண்டியிருந்தது. அப்பொழுது அவள் தனியாக மானேஜருடன் வேலை செய்ய அவசியம் ஏற்பட்டது. அப்பொழுது அவளுக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணை நினைவிற்கு வந்தது.

''உங்களுக்கு காரியாலயத்தில் வேலை செய்ய பிடித்திருக்கிறதா?''

''பிடித்து என்ன; பிடிக்காமல் என்ன? என்மேல் குடும்ப பாரம் சுமத்தப்பட்டிருப்பதால் நான் வேலை செய்தேயாகணும்'' என்றாள் ஊர்வசி.

''அப்படியா? உங்களுடைய குடும்ப நிலை கண்டு நான் மிக வருந்துகிறேன். இந்த காரியாலயத்தின் முழு உரிமையும் என் கைக்குள்ளேதான் இருக்கிறது. எனவே என் சொல்படி நீங்கள் கேட்டால் உங்களுக்கு சம்பளம் நிறைய கிடைக்கும்!'' என்று சொல்லி அவள் கையைப் பற்றினார். ஆனால் ஊர்வசி பேச முடியாமல் தன்னிடத்தைவிட்டு சரேலென நகர்ந்தாள். மிக்க கோபத்துடன் மானேஜர் அறைக் கதவைத் திறந்து கொண்டே வெளியேறினார். ஊர்வசி பயத்துடன் அறையை விட்டு வெளியில் வந்தாள்.

விபரமறிந்த திலோத்தமா இப்படிப் புத்தி சொன்னாள்:

''உனக்கு இங்கு வேலை நிலைத்திருப்பது நிச்சயமில்லை! உன்னைப்போல நாங்கள் எல்லோரும் இந்த நரகத்தில் போய் விட்டு அதில் மாட்டிக் கொண்டு தான் வெளியே வந்திருக்கிறோம்! என்ன செய்வது? வயிற்றை வளர்க்க வேண்டுமே! நம் தொண்டைக்குள் சிறு புழு பூச்சி தற்செயலாக உள்ளே சென்று விட்டால், அவை சட்னியாகாமல் வெளி வருவதில்லை! அடீ ஊர்வசி, நீ தண்ணீரில் இறங்கி சிறிய மீன் கிடைத்ததே போதும் என்று வெளிவராதே! அந்த சிறிய மீனைக் கொண்டே மிகப் பெரிய மீன் பிடிக்க வழி பார்!'' என்றாள்.

ஊர்வசிக்கு அழுகை வந்து விடும் போலிருந்தது; அடக்கிக் கொண்டாள்.

●●●

அன்று முதல் மானேஜர் அவள் செய்யும் காரியங்களில் எல்லாம் ஏதேனும் குற்றம் கண்டு பிடித்துத் திட்ட ஆரம்பித்தார். ''டைப்'' அடித்துச் சென்றவைகளை சரியாக கவனிக்காமலே மறுபடி 'டைப்' அடிக்கச் சொல்லி விரட்டினார். இல்லாத காரணத்திற்கெல்லாம் அவள்மேல் எரிந்து விழுந்தார். ஒரு சமயம் ஊர்வசியை எல்லா காரியாலய சிப்பந்திகள் முன்னிலையிலும் கௌரவக் குறைவாகப் பேசி அவமானப் படுத்தினார்.

இதையெல்லாம் கண்ட திலோத்தமா, ''ஊர்வசி, நீ வேலையில் கவனம் செலுத்திச் செய!'' என்றாள்.

''கவனமாகத்தான் செய்கிறேன். என்னால் எவ்வளவு கவனமாக டைப் அடிக்க முடியுமோ அவ்வளவு நன்றாக அடிக்கிறேன்! நாலைந்து முறை வாய் திறவாது 'ஓவர் டைம்' வேலையும் செய்திருக்கிறேன். இன்னும் என்ன செய்ய?'' என்றாள் ஊர்வசி.

''அந்தப் பெரிய மனிதருடன் சாப்பிடப் போ! சினிமாவுக்குப் போ!''

''போதும் போதும் திலோத்தமா! என்ன வார்த்தைகளைக் கொட்டுகிறாய்? உனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லையே?''

''அடீ பைத்தியக்காரி! இவ்வுலகில் நாம் பைத்தியமாக நடித்தால் ஒழிய வாழ முடியாது!''

ஊர்வசிக்கு இதையெல்லாம் கேட்டுக் கண்களில் நீர் வந்தது. இதற்குப் பிறகு ஊர்வசியால் நிம்மதியாக காரியாலயத்தில் வேலை செய்ய முடியவில்லை.

●●●

''மிஸ் கேல்கர், நீங்கள் எப்போதாவது 'தாஜ்மகால்' ஓட்டலுக்குப் போனதுண்டா?

''நான் இதுவரைக்கும் எந்த ஓட்டலுக்குள்ளும் நுழைந்தது கிடையாது!''

''நான் நினைத்தேன். இன்றைக்கு அற்புதமான நிகழ்ச்சி ஒன்று 'தாஜ்'ஜில் இருக்கிறது. 'லஞ்ச்' சமயத்தில் ஒன்று ஹங்கேரிய நடனக்காரிகளின் அருமையான நடனக் கச்சேரி இருக்கிறதாம். நீங்கள் வருகிறீர்களா?''

ஒரு நிமிடம் ஊர்வசி பேசவில்லை. பிறகு தைரியத்துடன், ''நான் கிராமப் பெண். இவைகளையெல்லாம் நான் கேட்டதே இல்லை. இவ்விஷயத்தில் நீங்கள் என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்றாள்.

ஆனால் அந்த மானேஜர் அவளை மன்னிக்கவில்லை. அவருடைய கோபம் மறுநாள்தான் அவளுக்கு விளங்கிற்று.

●●●

மறு நாள் அவள் காரியாலயத்தில் நுழைந்தவுடன் சேவகன் அவளிடம் ஒரு சீட்டைக் கொடுத்தான். அதில்...

''தாங்கள் நடந்துகொள்ளும் விதமும், வேலை செய்யும் முறையும் திருப்திகரமாக இல்லாததால், உங்களை முதல் தங்களை வேலையிலிருந்து விலக்குகிறோம்!''

அந்தக் கசக்கும் மருந்தை அவள் ஒருவாறாக மென்று விழுங்கினாள்.

●●●

இன்றைக்கு அவள் தன்னுடைய முதல் மாதச் சம்பளமும் கடைசிச் சம்பளமுமான பணத்தைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்புகிறாள்.

புதுக் கண்ணாடி மாட்டப் போய்தான் பழைய நினைவுகள் அவளுக்குத் திரும்பின. தன் வருகையை ஆவலுடன் தன் சகோதரர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்; ஆதலால் அவர்களுக்காக நிறைய தின்பண்டம் ஒரு கடையில் வாங்கிக்கொண்டாள். சிறிய தங்கையான உஷாவிற்கு ஜரிகைப் பாவாடை வாங்கி வருவதாக காலையில் சொல்லிவிட்டு வந்திருந்தாள். ஆனால் இப்பொழுது இல்லைமை...?

அவள் வாங்கின தின்பண்டப் பொட்டலம் அவிழ்ந்து விடவே, வழியில் நின்று கட்டிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளை உராய்ந்து சென்றது ஒரு டாக்ஸி. அதனுள் இருப்பவரைப் பார்த்து விட்டாள் ஊர்வசி. அதில் அவளுடைய மானேஜரும், அருகில் அழகான பெண்ணும் மிக நெருக்கமாக உட்கார்ந்து, பேசிச் சிரித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தாள்!

வீட்டை அவள் நெருங்கியதும், அவளுடைய சகோதரர்கள் அவள் கையிலிருந்த தின்பண்டத்தை ஆவலுடன் பிடுங்கிப் பிரித்துச் சாப்பிட்டார்கள்.

''இப்பொழுதுதான் காரியாலயத்திலிருந்து வருகிறாயா? உன் முகம் ஏன் அவ்வளவு வாட்டமாக இருக்கிறது? துணிமணி ஒன்றும் வாங்கிக்கொள்ளவில்லையா?''—அவளுடைய தாயார் மிக அன்போடு கேட்டாள்.

ஒரு நிமிடம் கழித்து மறுபடி தாயார் கேட்டாள்:

''காரியாலயத்தில் வேலை எல்லாம் பிடித்திருக்கிறதா?''

''ஆகா! பிடித்திருக்கிறது!''

''இரவு வேலை இல்லையே: கஷ்டமில்லையே?''

''சே சே!... அதெல்லாம் ஒன்றுமில்லை. சுலபமான வேலை தான். காரியாலயத்தில் என்னை எல்லோரும் விரும்புகிறார்கள்!''

அவள் தாயாரின் காலைப் பிடித்துக்கொண்டே இப்படிப் பேசினாள். ஒரு முறை எதிரே தலை நிமிர்ந்து பார்த்தாள். எதிரே ரவிவர்மா தீட்டிய ஊர்வசியின் படம் தொங்கிக் கொண்டிருந்தது. அந்தப் படத்தைப் பார்த்துவிட்டுதான் அவளுடைய தகப்பன் அவளுக்கு ஊர்வசி என்று பெயர் வைத்து, மிகுந்த செல்வத்துடன் அவளை வளர்த்தாரோ!

அந்த இடத்தை விட்டு வேகமாக எழுந்து அறையினுள் நுழைந்து 'ஓ'வென்று அழ ஆரம்பிக்குமுன்பு எங்கோ திருவிழாவின் பெருத்த ஆரவாரம் கேட்டது. தன் இதயத்தில் கையைப் பலமாக வைத்துக் கொண்டு வாய்விட்டுக் கத்தி அழுதாள் ஊர்வசி. அவள் கண்களிலிருந்து ஓடிய கண்ணீர் அவள் மனப்பாரத்தைக் குறைத்து, நிம்மதியைத் தந்தது போன்ற உணர்வைப் பெற்றாள், அப்போது!

[மராட்டியக் கதை—தமிழாக்கம்]

—பி. ஆர். ராஜாராம்

சென்னை வழக்கு நிதிக்காக

22-3-58 சனி மாலை 6 மணிக்கு

சென்னை ஒற்றவாடை கொட்டகையில்

அறிஞர் அண்ணா முன்னிலையிலும்

நாவலர் நெடுஞ்செழியன் தலைமையிலும்

மு. கருணாநிதி நடிக்கும்

(புதுமை நாடக மன்றத்தாரின்)

உதய சூரியன்

நாடகம்

தோழர்கள் எம். என். கிருஷ்ணன், எஸ். ஆர். கோபால், இராமகிருஷ்ணன், இராமையா, எஸ். ஏ. ஜி. சாமி, செயராமன், தோழியர்கள் ஆர். எம். மனோரமா, சீதாலட்சுமி, கலாவதி ஆகியோர் நடிக்கின்றனர்.

நன்கொடை:— ரூ. 5, 3, 2, 1.

—தி. மு. க.

எல்லோரும் 'இந்நாட்டு மன்னர்'கள்!

டெல்லி மக்கள் சபையிலே பட்ஜெட் விவாதத்தை முடிக்கும்போது, பண்டித நேரு இந்தியாவின் முன்னேற்றம் ஒரு நாடகம் போல என்று குறிப்பிட்டார். —'சங்கர்ஸ் வீக்லி'

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

காணிக்கை பற்றி பலப்படப் பேசப்பட்டது!

"அத்தனையும் அசல் வைரமாம். எத்தனையோ ஆயிரங்கள் பிடித்ததாம்! என்னே அவர் பக்தி!" என்று அவரது பக்திக்கு பாராட்டுரை வழங்கினர் சிலர்!

"மின்னலைப் போல் கண்ணைப் பறித்தது நகைகள்! ஜகதாம்பாளின் கடைக்கண் பார்வைக்கே இப்படிக் காணிக்கை என்றால்..." —நகைகளை நேரில் கண்டவனைப் போல ஒரு பொய்யன் விளக்கம் தந்தான்!

•

இப்படி எழும்பிய அபிப்பிராயங்களுக்கிடையே அந்த நேரமும் தானே வந்து சேர்ந்தது.

கோவிலில் என் போட்டால் எண்ணெயாகமளவும்படிக் கூட்டம் சேர்ந்திருந்தது.

தர்மகர்த்தா வீட்டிலிருந்து புறப்பட்டார்.

"ரத்னம்! காரை எடு! கோவிலுக்குப் போகவேண்டும்! முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது!" என்றார் அவர்.

ஆனால், ரத்னம்...அவனைத்தான் காணவில்லை! "எங்கே போய்விட்டான் அவன்? முக்கியமான நேரத்தில்தான் அந்தக் கழுதை எங்கே பாவது முடங்கிவிடும்......" என்று முணுமுணுத்தார் அவர்.

"வயிற்றுவலி என்று சொல்லிக் கொண்டிருந்தான். டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டானோ என்னவோ!..." என்றான் வண்டிக்கார வரதப்பன்.

"டாக்டர் வீட்டுக்குப் போக இதுதான் நேரமோ?...ஐயர் வரும் வரை அமாவாசைக் காத்திருக்குமென்ற திமிர் போலும்! வரதப்பா...நீ வண்டியைக் கட்டு!... உம்...புது வண்டி...புது பூரணி ஜோடி மாடுகள்!......ஆமாம்...... மறந்துவிடாதே!..." என்று ஆணையிட்டார் தர்மகர்த்தா. 'பளபள'க்கும் காரிலே சென்று பலருக்கு மத்தியிலே இறங்க முடியவில்லையே என்று வருத்தம்தான் அவருக்கு; எனினும் முகூர்த்த வேளை தவறி விட்டால் என்ன செய்வது?

வண்டி தயாராக நின்றது. தர்மகர்த்தா தன்னுடைய ஒற்றைக் கரத்தால் உள்ளேயிருந்து பெட்டி ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்தார். வண்டி புறப்பட்டது.

•

'ஜல் ஜல்' என்று சலங்கை ஒலி எழுப்ப —பெருத்து உயர்ந்த மாடுகள் அனாயாசமாக இழுத்துச் சென்ற வண்டி கோவிலின் வாசலில் வந்து நின்றதுதான் தாமதம்; கோவில் குருக்கள் முன்னே பாய்ந்து ஓடிவந்தார்!

தர்மகர்த்தா வண்டியிலிருந்து இறங்கினார். குருக்கள் இரு கரம் கூப்பி வரவேற்றார். வண்டிக்குள்ளே இருந்த பெட்டியைக் கண்டார். மறுகணம் பக்கத்தில் நின்று கொண்டிருந்த சீடனின் கையிலிருந்த வெள்ளித் தட்டிலிருந்த சந்தனக் கிண்ணத்தை எடுத்தார். பெட்டியின்மேல் சந்தன மழை பொழிந்தார். குங்குமம் வைத்தார். 'சென்ட்' தடவிய பெரிய மாலை ஒன்றை அணிவித்தார். பெட்டியை அவரே கையில் எடுத்துக் கொண்டார்.

மறுகணம் நாதசுர இசை கிளம்பியது!

தேவாரம் எழும்பியது!

"தர்மகர்த்தா கண்ணனுக்கு ஜே!" என்று வாழ்த்தொலி விண்ணைப் பிளந்தது!

இப்படி ஆரவாரத்துக்கிடையே குருக்கள் பெட்டியை சுமந்து கொண்டு ஜகதாம்பாள் கோவிலுக்குள் நுழைந்தார் அவரைப் பின் தொடர்ந்து வந்த தர்மகர்த்தா கர்ப்பகிருகத்தின் வாசலில் நின்று விட்டார். ஏன் தெரியுமா? அதற்கு மேல் அவர் செல்ல முடியாது. அம்பாளின் அருகிருக்க — தொட்டுக் குளிப்பாட்ட—ஆடை கட்டி அலங்கரிக்க — தனியுரிமை பெற்றவர்கள் குருக்கள்கள்தானே!

பட்டப் பகலிலும் — எண்ணெய் விளக்குகள் பலவற்றுக்கு மத்தியிலும் இருட்டாகவே இருக்கும் கர்ப்பகிருகத்திற்குள் பெட்டியுடன் நுழைந்தார், ஐயர். அம்பாளின் சிலைக்கருகே சென்றதும் பெட்டியை பயபக்தியுடன் கீழே வைத்தார். வாசலைத் தாண்டி கொஞ்ச தூரத்திற்கு அப்பால் நின்று கொண்டிருந்த தர்மகர்த்தாவும் மக்கள் பெரு வெள்ளமும் அன்னை ஜகதாம்பாளின் உடலில் அடுத்த வினாடி மின்னப் போகும் நகைகளை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆலய மணி 'டாண், டாண்' என்று ஒலித்தது. குருக்கள் சமஸ்கிருத மொழியில் தோத்திரம் ஜெபித்துக் கொண்டே தர்மகர்த்தாவின் பெட்டியைத் திறந்தார். பார்த்தார். மறுகணம் "ஐயோ" என்று அலறினார்! திறந்த பெட்டியும் மூடிக் கொண்டது! வைரமும் பொன்னும் இழைத்த மின்னும் நகைகளை அம்பாளின் உடலில் அள்ளிச் சொரியத் துடிதுடித்துக் கொண்டிருந்த குருக்களின் கரங்கள் குத்திட்டு நின்றன! மறுபடியும் ஒருமுறை அந்த அலறல் எழும்பியது. மறுகணம் வெட்டுண்ட வாழை மரம்போல் 'தடால்' என்று மூர்ச்சித்து கீழே சாய்ந்தார், கோவில் குருக்கள்!

கோவில் சட்டத்தையும் மீறி கர்ப்பகிருகத்தில் பாய்ந்தார் தர்மகர்த்தா. அவசர அவசரமாக பெட்டியைத் திறந்து மூடினார். உள்ளே ஓடிவந்தபோது அவர் உடலிலே தோன்றிய பதட்டம் இப்போது பயமாக மாறி, அவரது முகத்தை மேலும் கருப்பாக்கியது!

உள்ளே இருந்தது என்ன?

கை!

வெட்டுண்ட கை!

இரத்தம் பாய்ந்து, உறைந்து, காய்ந்து கிடந்த கை!

ஆமாம்; தம்பி தங்கத்தின் கைதான்!

தர்மகர்த்தாவின் மூளை பின் வெட்டு நேரத்தில் ஏதோ முடிவுக்கு வந்தது. 'சகுனம் சரியல்ல—அம்பாளின் சந்நிதியிலே ஆண்டாண்டு காலமாக காண முடியாத அபசகுனம்' — என்று நிரைவிட்டார். பெட்டியுடன் தப்பித்து விட்டார்!

•

"என் காணிக்கையை அம்பாள் ஏற்கவில்லை! வெறுத்து விட்டாள்! இனி எனக்கு என்ன சான் இருக்கிறது இந்த உலகத்தில்!..." என்று வேதனையோடு சொன்ன தர்மகர்த்தா தனது பெருமைக்குரிய பதவியை உதறி விட்டார். 'போதுமென்ற மனம்' பெற்று மூலையில் முடங்கிக் கொண்டார்!

ரத்னம்...ஜகதாம்பாள் அவனுக்குத்தான் வாழக் கற்றுத் தந்தாள். நகைகளுடன் பறந்து விட்டான். அந்த பரம்பரை பயங்கரவாதி!

ஆனால் ரத்னம் விடுவித்த தங்கம்...?

"ஜகதாம்பா! என் தாயே! இன்னும் இரங்க வில்லையா உன் நெஞ்சு? மென்மையான இதயம் உன்னுடையது என்பார்களே; அங்கே இந்த புறக்கணிக்கும் பண்பு எங்கிருந்தம்மா வந்து புகுந்தது? பேசு...பேசு...! நான் வாழ்வுக்கு வழி கேட்டேன்!...... உன் அன்பு மகனின் கரத்தையும் பறித்துக் கொண்டு பல்லிளித்து நிற்கிறாயே அன்னையே! தகுமா? ......இது முறையா?..."

—என்று இன்னும் கதறிக் கொண்டுதான் நிற்கிறான்.

எனினும் ஜகதாம்பாள் பேசவில்லை!



—சொர்ணம்

முகவரி மாற்றம்

எம். எஸ். மணி,
நாதன் சோடா பாக்டரி,
100-2, சாலை ரோடு,
உறையூர், திருச்சி—3.

பேசமாட்டாயா?

சென்ற இதழ் தொடர்ச்சி

தர்மகர்த்தாவின் அலறலைத் தொடர்ந்து கார் எழுப்பிய மெல்லிய ஓசையைத் தவிர அங்கே சற்று நேரம் பயங்கர அமைதி நிலவியது!

தர்மகர்த்தா இரும்பு நெஞ்சம் கொண்டவர்தான். ஆனாலும் இரத்தம் படிந்த வெட்டுண்ட கையைக் கண்டவுடன் அவர் நெஞ்சம் துணுக்குற்றது. அவர் உடல் வழக்கத்திற்கு மாறாக நடுங்கிக் கொண்டிருந்தது.

"ரத்னம்!..." என்றார் பதட்டத்துடன்.

அவன் பேசாமல் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். புயல் அடித்தாலும், பெருங் காற்று வீசினாலும் ஆடாது, அசையாது நின்று கொண்டிருக்கும் மைல் கல்லைப் போல் அவன் தோற்றமளித்தான். 'எதற்கும் அஞ்சாத இரும்பு மனம் என்னுடையது!' என்று உணர்த்தியது அவனது மௌனம்.

"ரத்னம்!.......உன்னைத்தான்... ரத்னம்!..."

"...உம்..." —சாவதானமாக இழுத்தான் அவன்.

"இது யாருடைய கைடா...?"

"ஏன், நீங்கள் ஒட்டவைத்துக் கொள்ளலாம் என்று பார்த்தீர்களா?..."

"என்ன?..."

"ஆனாலும் இது ஒட்டாது...... இது நல்லவனுடைய கை!..."

"இந்தக் காரியத்தை நீ ஏண்டா செய்தாய்?"

"நானா செய்தேன்?......"

"பின்?.........இந்த கோரத்தைச் செய்ய உன்னைப்போல மூர்க்கர்களின் முரட்டு மனம்தானேடா துணியும்?......"

ரத்னம், முன் சீட்டிலிருந்து 'வெடுக்' கென்று திரும்பினான். தர்மகர்த்தாவை ஒருமுறை வெறிக்கப் பார்த்தான். அவர் இதை எதிர்பார்க்கவில்லை. 'ஏன் இப்படி நோக்குகிறான்' என்று அவர் யோசிப்பதற்குள், மறுபடியும் பாதையின்மேல் விழிகளை ஓட்டினான் ரத்னம். ஆனாலும் அவன் வாய் முணு முணுத்துக் கொண்டிருந்தது.

"நான் செய்யவில்லை! என் 'எஜமான விசுவாசம்' தான் செய்தது! நீங்களே அன்று சொல்லவில்லை, கோவிலில் உங்களைக் கவனித்து விட்டவனின் கையை வாங்கி விட வேண்டுமென்று!......"

"அதற்காக...?"

"அதற்காகத்தான்! அந்த ஒற்றைக் கைத் திருடன் நீங்கள்தான் என்று ஊரார் முடிவு செய்வதற்குள் இன்னொரு ஒற்றைக் கையனைத் தயார் செய்து விட வேண்டுமென்று சொன்னீர்களே!"

"ஆமாம்!..."

"அதைத்தான் இன்று செய்தேன்!..."

"அப்படியானால்...இந்தக் கை யாருடையது...?"

ரத்னம் திடீரென்று மேலேவைத்த கையை எடுத்து அவரது முகத்துக்கு நேரே நீட்டினான். 'வேண்டாம், வேண்டாம்' என்று அலறினார் அவர்.

"இல்லை!...பயப்படாதீர்கள்! கை யாருடையது என்றுகேட்டீர்களே; கையிலே பச்சை குத்தியிருக்கிறது —படியுங்கள்!" என்றான் ரத்னம் சிரித்துக்கொண்டே!

தர்மகர்த்தாவின் உலர்ந்துபோன உதடுகள் அசைந்தன.

"த...ங்...க...ம்...!"

"உம்...தங்கம்தான்! அன்றிரவு கோயிலில் உங்களைத் திருடனாக சந்தித்தானே—இன்று கோயிலில் உங்களைக் காட்டிக் கொடுக்கவும் துணிந்தானே—நீங்கள் பைத்தியக்காரன் என்று பட்டம் கட்டித் திரிய விட்டீர்களே—அந்தத் தங்கம் தான்!"

—தங்கத்தைப் பற்றி ரத்னத்திற்கு தெரிந்தது அவ்வளவுதான். ஆனால் அதிர்ச்சியால் தாக்குண்டு கிடந்த தர்மகர்த்தாவின் மனதிலே தங்கத்தின் உருவம் தோன்றி; 'என் குடும்பத்தைக் குலைத்துவிட்டக் கொடியவனே!' என்று சாடியது. வறுமையால் பீடிக்கப்பட்டிருந்த தங்கத்தின் தந்தையை வஞ்சகத்தால் வீழ்த்தி—அவர் சொத்துக்களை அபகரித்து—அவமானத்தால் குன்றிய அந்த ஏழை உயிர்துறக்கு மளவுக்குத் துரத்தியது யார்? தர்மகர்த்தாதான் என்ற உண்மை ரத்னத்திற்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான்!

ஆனால்...இப்போது தங்கத்தின்—அந்த ஏழைச் சிறுவனின் ஒரு கரத்தையும் அல்லவா பறித்துவிட்டார் தர்மகர்த்தா!

"ரத்னம்!..."

"........."

"உன்னைத்தான்டா ரத்னம்!"

"சொல்லுங்கள்...காதில் விழுகிறது...நான் என்ன ஜெகதாம்பாளா, காது அடைபட்டுக் கிடக்க?..."

"அது சரி, இப்போது தங்கம் எங்கே?..."

"வெட்டுப்பட்ட காயம் ஆறும் வரை ரகசியமாக இருப்பான்; பிறகுதான் என்னால் 'திருடன்' என்று பெயர் தரப்பட்டு வெளியே வருவான்.

"இருக்கட்டும்! நீ இதுபற்றி என்ன நினைக்கிறாய்?"

"ஜகதாம்பாளின் சொத்திலே என் பங்குக்கு எவ்வளவு கிடைக்கும் என்று கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன்..."

"என்ன?..."

"பணம் காக்கும் பூதமாகிய உங்களைக் காப்பது நான்தானே!... கொஞ்சம் கவனிக்க மாட்டீர்களா, என்ன?..."

"ஏய் ரத்னம்! இப்போதுதான் உன் எண்ணமெல்லாம் புரிகிறது, நான் ஏமாளியாகி விட மாட்டேன்டா!..."

"நானும் கோமாளியாகி விட மாட்டேன், தெரியுமா?"

அதற்குள் தர்மகர்த்தாவின் மாளிகை நெருங்கி விட்டது. பேச்சைவளர்த்தஇதுவல்ல சமயம் என்று கருதித்தானோ என்னவோ அவர் வாயை மூடிக் கொண்டார். கார் நின்றது. தர்மகர்த்தாவின் நெஞ்சிலே என்றைக்குமில்லாத குழப்பம் சதிராட ஒன்றும் பேசாமல் காரைவிட்டு இறங்கி உள்ளே நுழைந்தார்.

●

"என்ன தர்மகர்த்தரய்யா! அம்பாளுக்குக் காணிக்கைகள் தாரதா சொன்னேளே; என்ன பண்ணிருக்கேள்?"

—கோயில் பெரிய குருக்கள் தர்மகர்த்தாவின் எதிரில் கைகட்டி வாய் புதைத்து நின்று இப்படிக் கேட்டார்!

"ஆமாம் ஐயர்! நகைகள் எல்லாம்கூட தயாராகி விட்டன. நாளையே ஒரு விழா நடத்தி நகைகளை அம்பாளுக்குக் காணிக்கை தந்துவிடலாம்!" என்றார் தர்மகர்த்தா!

"என்ன; இவ்வளவு சீக்கிரமாவா செய்துட்டேள்? அடடா...அம்பாளுக்குக் கைங்கர்யமுன்னா காலங்கூட குறுகிடுதா, என்ன?..."

"அதெல்லாம் ஒன்றும் கேட்காதீர்கள், ஐயர்! அம்பாளிடமிருந்து காணாமல் போன நகைகளைப் போலவே செய்திடச் சொல்லிவிட்டேன். மறந்து விடாதீர்கள்... நாளையே திருவிழா நடைபெற வேண்டும். உடனே நீங்கள் வேண்டியவற்றைப் போய் கவனியுங்கள்!"

தர்மகர்த்தா தன்னை விரட்டிவிடும் பாவனையில் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொண்ட ஐயர் வேகமாக வெளியேறினார். அவர் சென்ற பிறகு உள்ளே நுழைந்தான் ரத்னம். "என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள் எசமான்? ஜகதாம்பாளுக்குக் காணிக்கையா? நகைகளா? எனக்கொன்றும் புரியவில்லையே!" என்றான் அவன்.

"உனக்கு ஒன்றும் புரியாதுதான். இருந்தாலும் நீ தெரிந்து கொள்ள வேண்டாமா? நீ பங்கு கேட்டாயே நினைவிருக்கிறதா; அந்த நகைகள் எல்லாவற்றையுமே மீண்டும் ஜகதாம்பாளுக்கு உரிமையாக்கிவிடப் போகிறேன்! ஆனால், கவனி—காணாமல் போன சொத்து மீண்டுவிட்டது என்றல்ல; புதிய நகைகள் என்ற பெயரில்; என் காணிக்கையாக!"

"அப்படியானால்?..."

"நீ பங்கு கேட்க உரிமையில்லை ரத்னம்! மேலும் நான் ஏமாளியாகவும் இல்லை; நீ கோமாளியாகவும் இல்லை! நகைகளைப் பறிகொடுத்துப் பேசாமல் நிற்கிறாளே; அந்த ஜகதாம்பாள்தான் மீண்டும் பணக்காரியாகிறாள்!..."

ரத்னம் சற்று நேரம் பேசாமல் நின்றான். அவனது சிவந்த கண்கள் இப்போது மேலும் சிவந்தன. அது ஏமாற்றத்தினாலா—அல்லது கோபத்தினாலா என்பதை தர்மகர்த்தாவாலேயே கண்டு பிடிக்க முடியவில்லை. ரத்னம் பேசாமல் வெளியில் நடந்தான். பேசாது—அதிகம் செயல்படும் அவனது மௌனத்தின் பின்னே என்னவோ மறைந்துகொண்டிருக்கிறது என்பதை உணராத தர்மகர்த்தா சிரித்துக்கொண்டார். அவர் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள நகைகளை இழக்கத்தான் செய்கிறார். ஆனாலும் தனது அடிமை ஒருவனையும் 'கூட்டாளி'யாக்கிக் கொள்ளும் தாழ்விலிருந்து தப்புகிறாரல்லவா; அந்த திருப்தி அவருக்கு. அன்று இரவு நிம்மதியாகத் தூங்கினார்!

அன்று இரவு தூங்காத உயிர்களும் இருந்தன என்றால்—அவர்களில் ஒருவன் ரத்னம்! புரண்டு புரண்டு காருக்குள்ளேயே அவன் தூங்க முயற்சித்தான். தூக்கம் வந்தால்தானே! ஜகதாம்பாள் ஆலயத்தில் இரவோடு இரவாக நகைகளைக் களவாடிய தர்மகர்த்தாவுக்கு உதவிய காட்சி — அதிலே தனக்கும் பங்கு கிடைக்கும் என்ற பேராசை—இறுதியிலே பயங்கர ஏமாற்றம் — இவைதான் அவன் நினைவிலே தோன்றி வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன!

அடுத்தபடியாக கோயில் தலைமைக் குருக்கள்—இரவோடு இரவாக கோயிலில் காணிக்கை செலுத்தும் 'உற்சவத்'திற்கு ஏற்பாடு செய்யக் கட்டளையிட்டு விட்டாரே தர்மகர்த்தா, அவருக்கு எங்கிருந்து தூக்கம் வரும்? உற்சவம் ஏக தடபுடலாக நடைபெற வேண்டாமா? ஆட்கள் பலரை வேலை வாங்கிக் கொண்டு தூக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தார் அவர்!

கடைசியில் தங்கம்! வெட்டுண்ட கையைப் பார்த்துப் பார்த்துப் புலம்பிக்கொண்டே கிடந்தான். "உன் கண்களும் மூடிக் கொண்டு விட்டதா, ஜகதாம்பா? உன்னை கோடான கோடி முறைக் கும்பிட்டுச் சலித்த என் கரத்தைக் காணமாட்டாயா? என் குரல் உன் செவிகளில் விழவில்லையா?" என்று அலறிக் கொண்டிருந்தான்!

ஆனால் இவை எல்லாவற்றுக்குமே காரணமான ஜகதாம்பாள் மட்டும் தூங்கிக்கொண்டிருந்தாள், அமைதியான இடத்தில் — அரவம் எழாத கோயிலின் 'கர்ப்பகிரகத்'தில்!

●

இந்த நிலையில் பொழுது விடிந்தது!

ஊரே உற்சவக் கோலத்தில் தனி சோபையுடன் விளங்கியது. ஒரே இரவில் கோவில் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது!

ஊரிலே தர்மகர்த்தாவின்

[10—ம் பக்கம் பார்க்க]

வெளிச்சம் போட்டு...

[முதல் பக்கத் தொடர்ச்சி]

முதலாளிகளும் சுரண்டிக் கொழுக்கிருர்கள் என்பதாக, பல ஊழல்கள் மலிந்திருப்பதாக எடுத்துச் சொன்னுர்கள்.

திரு. சேதுபதி அவர்கள் நம்மைப்போன்றவரல்ல. அவர் சொல்லுவதைத் துச்சமென்று கருதுவதற்கில்லை. எங்கெந்த 'பைல்கள்' தங்கள் கையிலிருந்தால் தங்களை 'மேதை' என்று கருதுகிருர்களோ, அந்த 'பைல்'களையெல்லாம் தம் கையில் ஒரு காலத்தில் வைத்திருந்தவர்தான் இராமநாதபுரம் சேதுபதி. எங்கெந்த உத்தியோகஸ்தர்களை அழைத்துப் பேசுவதால் 'மேதை' என்று கருதுகிருர்களோ அந்த உத்தியோகஸ்தர்களை தனக்குக் கீழ் வைத்திருந்து ஆண்டவர்தான் சேதுபதி அவர்கள். அவர்தான் இன்று, தான் கண்ட உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிருர். அவர் ஏதேதோ எதிர்க் கட்சிகளுடன் உறவாடுவதால் இதைச் சொல்லவில்லை. அவரை நான் இதுவரை ஒரு முறைகூடச் சந்தித்துப் பேசவில்லை. ஏதோ இரண்டு மூன்று தடவை பார்த்திருக்கிறேன், அவ்வளவுதான். என்னோடு பேசினுல்கூட, பேசினவரும நானும் சந்தேகத்துக்குரியவர்களாகிவிடுவது வழக்கமாக இருக்கிறது என்பதற்காகத்தான் இதையும் சொல்கிறேன். அவருடன் நான் பேசியதில்லை. எனவே, அவர் சொல்வதை அலட்சியப் படுத்தக்கூடாது. ஒரு ஓட்டலில், 'போண்டா' நன்ருக இல்லையென்று சாப்பிடுபவர்கள் சொல்வதைக் காட்டிலும், வேருெரு ஓட்டலில் வேலை செய்பவன் சொல்வதில் உண்மையிருக்கும். அதைப்போல, அமைச்சராக இருந்தவர் சொல்கிருர் ஓட்டைகளைக் கண்டுபிடித்து அடையுங்கள் என்று.

சட்டசபையில் அமைச்சர் சொன்னுர்; இந்தியத் துணைகண்டத்திலேயே இந்த இராஜ்யத்தில்தான் மின்சாரம் அதிகமாகப் பயன் படுத்தப்படுகிறது என்று. உண்மைதான். ஆனுல், மற்ற இராஜ்யங்களில் மின்சாரம் பயன்படுத்தப்படுவதற்கும், இந்த இராஜ்யத்தில் பயன்படுத்தப்படுவதற்கும் வேறுபாடு உண்டு. மற்ற இராஜ்யங்களில் தொழில்களுக்கு உதவுகிறது மின்சாரம். இந்த இராஜ்யத்தில் ஒளி தருவதற்கு மட்டும்தான் உதவுகிறது. இதைக் கொச்சை மொழியிலே சொல்ல வேண்டுமானுல் வெளிச்சம் போட்டு வாழ்கிறது இந்த இராஜ்யம் என்றுதான் சொல்லவேண்டும்.

'நாம் வெளிச்சம் போட்டு வாழ்கிருேம்; மற்ற மாநிலத்தவர் தொழில் செய்து வாழ்கிருர்கள். வெளிச்சம் போட்டு வாழ்வது என்ருல் வீண் ஆடம்பரம் செய்து வாழ்வது என்று பொருள். இதனுல் பயனென்றுமில்லை.

எனவே, பயனுள்ள காரியங்களில் ஈடுபடுமாறு ஆளவந்தாரை கேட்டுக்கொள்கிறேன்.

அச்சாணி அலட்சியப்படுத்தப்படுகிறது!

"நடுத்தர மக்கள், ஊஞ்சலைப் போன்றவர்கள்; அவர்கள் பயங்கரக் கிளர்ச்சிகளிலும் ஈடுபட முடியாது; பணக்காரர்களைப்போல ஆசை காட்டியோ, மிரட்டியோ காரியத்தைச் சாதித்துக் கொள்ளவும் முடியாது.

"நான் இப்படிக் கூறுவதனுல், பயங்கரக் கிளர்ச்சியில் இவர்களை ஈடுபடச் சொல்வதாக தயவு செய்து ஆட்சியாளர்கள் தப்பர்த்தம் செய்து கொள்ள வேண்டாம். பயங்கரக் கிளர்ச்சி இல்லையென்பதால்தான், அவர்களை ஆட்சியாளர்கள் அலட்சியம் செய்கிருர்கள் என்று கருதுகிறேன்.

"வண்டிக்குக் கடையாணி எவ்வளவு முக்கியமோ, அதைப்போல இவர்கள் அரசாங்கத்துக்கு முக்கியமானவர்கள். கடையாணி வளைந்திருக்கிறது என்ருல அதைச் சீர்படுத்தாமல் மாட்டுக்குக் கொம்பு சீவி வண்ணம் பூசிக் காட்டுகிருர்கள் ஆட்சியாளர்கள்!

"வீண் ஜம்பத்திற்காகவே — வெளிநாட்டுக்காரன் நம் நாட்டைப்பற்றிப் புகழ்ச்சியாக பேசவேண்டும் என்பதற்காகவே—இவர்கள் காரியங்களைச் செய்கிருர்களேயொழிய, நாட்டிலே ஏற்பட்டுள்ள வளைவுகளை நலிவுகளைப் போக்க உள்ளபடியே முயலவில்லை!

"இன்னமும், என். ஜி. ஓ.—க்களினுடைய அதிருப்தி பற்றி மத்திய சர்க்காருக்குச் சரியானபடி அறிவிக்கப்படவில்லை. இந்த ஆட்சியாளர், அடிப்படையைக் கவனிக்காமல், மேற்பூச்சு வேலையில்தான் கவனம் செலுத்தி வருகிருர்கள்.

"என். ஜி. ஓ.—க்கள் மத்திய சர்க்காரைக் கேட்டால் இந்தப் பிரச்சினை உங்கள் மாநிலத்தைச் சேர்ந்தது; மாநில சர்க்காரைக் கேளுங்கள் என்கிருர்கள். மாநில சர்க்காரைப் பார்த்துக் கேட்டால் 'பணத்துக்கு எங்கே போவது? மத்திய சர்க்கார் கொடுக்கவில்லையே என்கிருர்கள்.

"ஆட்சிக்கு அச்சாணி போன்ற என். ஜி. ஓ.—க்களின் பிரச்சினை இந்த முறையிலே அலட்சியப் படுத்தப்படுகிறது.

"நான் இந்த ஆட்சியாளருக்குச் சொல்லிக் கொள்வேன் —நீங்கள் பிரச்சினையை வலியுறுத்தி மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லுங்கள்; அதை விடுத்து, ஆணவம் பிடித்தவர்களைப்போலப் பேசாதீர்கள். நீங்கள் எங்களைக் காட்டி மத்திய சர்க்காரிடம் கேளுங்கள்.

"இந்த கூட்டத்தின் மூலம் மாநில சர்க்காரின் கரங்களை வலியாக்க விரும்புகிறேன். இதை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு மத்திய சர்க்காரை வலியுறுத்தாமல், எதிர்க்கட்சியுடன் சேர்ந்து இந்த என். ஜி ஓ.—க்கள் கூட்டம் போடுகிருர்களே என்று கருதி, பின்னர், கூட்டம் போட்டவர்கள்மீது நடவடிக்கை எடுப்பார்களேயானுல் பிறகு எங்கள் பேச்சுக்கு மத்திய சர்க்காரில் மதிப்பு இருக்காது. இந்த மாநிலத்தைக் கண்டு மத்திய சர்க்கார் பயப்படாது. அதனுல் மாநில ஆட்சியாளரின் பலமும் குறையும் என்பதை **உணர வேண்டும்.**

"அண்மையிலே மேற்கு வங்க மாநிலத்தின் சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிருர்கள் — மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ஒதுக்கிய பணம் போதவில்லை —என்று! அவர்களால் அதை நிறைவேற்ற முடிந்தது; ஆனுல சென்னை சர்க்கால் முடியவில்லை! ஏன் உங்களுக்கு இந்த பயம்? பயம் இருக்குமேயானுல் நீங்கள் எப்படி காங்கிரஸ்காரர்களாக இருக்க முடியும்?

"இன்று இந்தக் கூட்டத்திலே நிறைவேற்றப்படுகிற தீர்மானம சட்டசபையிலே நிறைவேற்றப்பட வேண்டும்; அப்படி நிறைவேற்றப்பட்டால், நிச்சயம் மத்திய சர்க்கார் பணிவார்கள். அப்படி ஒரு தீர்மானத்தை நம் எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. ராமசாமி அவர்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தீர்மானம் வருமேயானுல் எதிர்க்கட்சியிலுள்ள அத்தனை பேரும் அதை ஆதரிப்பார்கள் என்பதும உறுதி.

"நாட்டின் முதுகெலும்பு போன்ற என். ஜி. ஓ.-க்களின் பிரச்சினையைத் தீர்க்க மாநில ஆட்சியாளர்கள் மத்திய சர்க்காருடன் போராடிப் பணம் கேட்க வேண்டும், இவர்கள் போராடினுல் பணம் கொடுப்பார்கள். ஏன் கொடுக்க மாட்டார்கள்? ஒரு சாதாரண முந்திரா ஒருநாள் பேசி முடித்து, ரூ. 1 கோடி 25 இலட்சம் வாங்க முடிந்தது என்ருல் ஏன் இவர்களால் முடியாது? கேட்க வேண்டிய இடத்தில் கேட்டு, செய்ய வேண்டியதைச் செய்தால் பெற வேண்டியதைப் பெற முடியும்.

"இந்த அமைச்சர்கள், உண்மையில் அல்ல—ஒப்புக்காகவேனும் 'இராஜிநாமா செய்து விடுவோம்' என்று மிரட்டினுல் போதும் — தன்னுலே பணம் தந்து விடுவார்கள் மத்திய சர்க்கார்! அதற்குத் துணிய மாட்டார்கள் இவர்கள்!

"அப்படி இராஜிநாமா செய்துவிட நேர்ந்தால், 'அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சிக்காரர்கள் எவருமே போட்டியிட மாட்டோம்; நீங்களே வெற்றிபெற வேண்டுமென்று விட்டு விடுகிருேம்' என்ற உறுதியைக்கூடத் தருகிருேம்; செய்து காட்டுங்கள் பார்ப்போம்!"

—சென்னைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு

சென்னை பிராபாத், கெயிட்டி, உமா மற்றும் தென்னாடெங்கும்



ஆசிரியரும, அச்சிடுபவரும, வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6